
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

சுடர் : 36 கதிர் : 275 | திங்கட்கிழமை | ஆவணி 14 ஆம் நாள் 30 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



## கொரோனா 4,612

கொழும்பு, ஒக. 30
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 4 ஆயிரத்து 612 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின்

19

### தமிழகத்தில் உள்ளோரை அழைக்கமுன்

# இங்கு முகாமிலுள்ளோரை முதலில் குடியேற்றுங்கள்!

### நாமலுக்கு மனோ 'பளார்'



கொழும்பு, ஒக. 30
'தமிழகத்து இலங்கை அகதிகளை இங்கு வரவேற்க முன்னர், இன்றும் யாழ்ப்பாணத்தில், பத்தாண்டுகளாக இடம்பெயர் முகாம்களில் வாழும் தமிழ் மக்களை மீளக் குடியேற்றுங்கள் இவ்வாறு அமைச்சர் நாமல் ராஜபக்சவைக் கோரியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.
தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகளுக்கு உதவித் திட்டங்களை

19

## 5 நாள்களில் 1,041 இறப்பு

கொழும்பு, ஒக. 30
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த 5 நாள்களில் ஆயிரத்து 41 பேர் பலியாகியுள்ளனர்.

19

# யாழில் கொரோனா உக்கிரம்

# 8 நாள்களில் 36 பேர் சாவு!



யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 30
யாழ்ப்பாணத்தில் கடந்த 8 நாள்களில் மட்டும் 36 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் தரவுகள் குறிப்பிடுகின்றன.

19

# கொரோனா பலி 192

கொழும்பு, ஒக. 30
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 192 பேர் உயிரிழந்துள்ளனர்.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசதகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 775ஆக

19

## கோத்தா அரசின் 'கோட்டா' முறை



கொழும்பு, ஒக. 30
இலங்கையின் பொருளாதாரம் கையறுநிலைக்கு சென்றுள்ள சூழலில், போதிய அந்நியச் செலாவணி கையிருப்பில் இல்லை என்ற பெரும் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் கோத்தாபய ராஜபக்ச அரசு, இனி மேல் அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்கு 'கோட்டா' முறையில் பங்கிட்டு அனுமதி வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருகின்றது எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.
சீனி, பருப்பு போன்றவற்றின் விலை கிலோ 250 ரூபா என்ற உச்சத்தைத் தொட்ட நிலையில் அத்தகைய அத்தியாவசியப் பொருள்களை நியாய

19

### ஐ.நா. கூட்டத் தொடர்பற்றி

## தமிழரசு நேற்று ஆராய்வு

கொழும்பு, ஒக. 30
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாக இருக்கும் தருணத்தில் இந்த முயற்சிகளின் தாக்கங்கள் குறித்தும், இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஈடுபாடு குறித்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்று ஆழமாக ஆராய்ந்துள்ளது.
அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பப்படவிருக்கும் அறிக்கை சம்பந்

19

## யாழ்ப்பாணத்தில் மேலும் ஐவர் பலி

யாழ்ப்பாணம், ஒக. 30
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த மூவர் உட்பட மாவட்டத்தில் மேலும் 5 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நல்லூரைச் சேர்ந்த 69 வயதுடைய பெண் ஒருவரும், நெல்லியடியைச் சேர்ந்த 64 வய

19

## இன்றுமுதல் சதொசவில் பழுப்புச் சீனி 130 ரூபா!

கொழும்பு, ஒக. 30
சதொசவில் இன்றுமுதல் பழுப்புச் சீனி 130 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சீனியைப் பெறுவதில் நுகர்வோருக்கு இருக்கும் பிரச்சினை களைப் போக்குவதற்காக நாளைமுதல் (இன்று) செவனகல, பெலவத்த

19


## துறைமுகத்தில் 5,000 தொன் சீனி!

கொழும்பு, ஒக. 30
சதொச சீனி விநியோகஸ்தர்களால் இறக்குமதி செய்யப்பட்ட 5 ஆயிரம் தொன் சீனி, கொழும்புத் துறைமுகத்தில் சிக்கியிருப்பதே, நாட்டில் சீனியின் விலை அதிகரிப்புக்குக் காரணமென சதொச நிறுவனத்தின் தகவல்கள் தெரிவிக்கின்

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளொன்றுக்கு 140 தொன் ஒட்சிசன் இப்போது தேவை




கொழும்பு, ஓக. 30

கொரோனா நோயாளர்களுக்கு வழங்குவதற்காக வாராந்தம் 300 தொன் ஒட்சிசனை இந்தியாவிலிருந்து கொண்டு வருவதற்கு தீர்மானித்துள்ளதாக ஔடத உற்பத்திகள், வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளர், மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நாட்களில் கொரோனா நோயாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 140 தொன் ஒட்சிசன் வழங்கப்படுவதாக அமைச்சின் செயலாளர், மருத்துவர் சமன் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்று பரவுவதற்கு முன்னர் நாட்டில் நோயாளர்களுக்காக 20 தொன் ஒட்சிசன் அளவு போதுமானதாக இருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ.இ)



# வயல் காணிகளில் மணல் அகழ்வு

### விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, ஓக. 30

கிளிநொச்சியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வால் வயல் காணிகளை இழந்து வருகின்றோம் என்று நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். மழையை நம்பி ஒரு போகம் விதைப்பில் ஈடுப்படுகின்ற விவசாயிகளின் வயல் நிலங்களில் சட்டவிரோதமாக குழிகள் வெட்டப்பட்டு மணல் அகழ்வு தொடர்கின்றது. அதனால், குறித்த காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கரைச்சியில் ஊற்றுப்புலம், சிவநகர், பன்னங்கண்டி, கண்டாவளையில் உமையாள்புரம், தட்டுவன்கொட்டி, பெரியகுளம், கண்டாவளை, நாகேந்திரபுரம், கல்லாறு, போன்ற பிரதேசங்களில் இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வால் வயல் நிலங்களை விவசாயிகள் இழக்க நேரிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் அதிகாரிகளின் கவனத்துக்கு பல தடவைகள் கொண்டுசென்றபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுப்படுகின்றவர்களை தங்களால் தடுக்க முடியாதுள்ளது. மீறித் தடுத்தால் அல்லது தட்டிக்கேட்டால் வாள் வெட்டுக்கு இலக்காக நேரிடுகிறது.

எனவே மாவட்டத்தின் எதிர்காலம் கருதி பொறுப்பு வாய்ந்த அனைத்து தரப்பினர்களும் ஒன்றிணைந்து, சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்று நெற்செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த214)

# 2ஆவது டோஸ் தடுப்பூசி வழங்கல் யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்

### *மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 30

முதலாவது தடவைக்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், 18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கான இரண்டாவது தடவைக்கான தடுப்பூசிகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்பட உள்ளன என்று, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் க. நந்தகுமாரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

வடக்கு மாகாணத்தில் கொவிட் 19 தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் 3ஆம் கட்டத்தின் முதலாவது தடவை தடுப்பூசியேற்றும் பணிகள் கடந்த ஜுலை மாத இறுதியிலிருந்து நடைபெற்று வந்தன. அதன்போது முதலாவது தடவைக்கான தடுப்பூசியை பெற்றுக்கொண்ட 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், 18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கான இரண்டாவது தடவைக்கான தடுப்பூசிகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்பட உள்ளன.

18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, முன்னர் வழங்கப்பட்டதன் படியே பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட தினத்தில் தடுப்பூசிகள் வழங்கப்படும். தடுப்பூசி ஏற்றப்படும் தினம் பற்றிய விவரங்கள் பிரதேசங்களுக்குப் பொறுப்பான சுகாதார மருத்துவ அதிகாரிகள் மூலம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அறியத்தரப்படும். தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் தொடர்பாக சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மூலம் மக்களுக்கு அறிவிக்கப்படும். பொதுமக்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு செல்லும்போது முதல் தடவை தடுப்பூசி பெற்றுக் கொண்டமையை உறுதிப்படுத்துவதற்காக சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் வழங்கப்பட்ட அட்டையை எடுத்துச் செல்ல வேண்டும்.

தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு அழைத்துவர முடியாத நிலையில் படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு முதல் தடவை வழங்கப்பட்டதைப் போன்று அவர்களது வீடுகளுக்கே சென்று தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கான தடுப்பூசியானது தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் இறுதி நாள்களில் வீடுகளுக்குச் சென்று வழங்கப்படும். யாழ். மாவட்டத்தில் சில வகை மருந்துகள், ஊசிமருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கும், மற்றும் வேறு ஆபத்துக்குரிய நோய் நிலைமை உடையவர்களுக்கும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் உள்ள யாழ். போதனா மருத்துவமனை மற்றும் சாவகச்சேரி, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை போன்ற ஆதார மருத்துவமனைகளில் முதல் தடவை வழங்கப்பட்டதைப் போன்றே செப்ரெம்பர் மாதம் 4 மற்றும் 11 ஆம் திகதி சனிக்கிழமைகளில் இரண்டாவது தடவைக்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு வழங்குவதற்காக பிரத்தியேகமாக தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. - என்றுள்ளது. (த-26)

### பொதுமக்களிடம்

# தியாகம் செய்யுமாறு கோர அரசுக்கு உரிமை இல்லை

### *ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 30

மக்களைத் தியாகம் செய்யுமாறு கோரிக்கை விடுப்பதற்கு அரசுக்கு உரிமை இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தற்போதைய தருணத்தில் கொரோனாவைக் கட்டுப்படுத்த ஒரு நிபுணர் குழுவை நியமிக்க அரசு உறுதியளிக்க வேண்டும். மக்களை தியாகம் செய்யக் கோர அரசுக்கு நியாயமான உரிமை இருக்கிறதா என்று சூம் தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்ற கலந்துரையாடலில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ரணில் மேற்கண்ட பதிலை வழங்கினார்.

உலக சுகாதார அமைப்பு, கொரோனாவைக் கட்டுப்படுத்த நிபுணர் குழுவை நியமிக்க அழைப்பு விடுத்தது என்றும் இலங்கையைத் தவிர அனைத்து நாடுகளும் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (த-இ)



### கொரோனாக் கட்டுப்பாட்டில்

# செல்வந்த நாடுகளின் நடைமுறையை நாம் பின்பற்றுவது சாத்தியமேயில்லை

### *கூறுகிறார் மஹிந்த*

கொழும்பு, ஓக. 30

செல்வந்த நாடுகளால் பின்பற்றப்பட்டு வரும் கொரோனா கட்டுப்பாட்டு முறையை இலங்கையில் நடைமுறைப்படுத்த முடியாது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஞாயிறு பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனாப் பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதில் சில செல்வந்த நாடுகள் முன்னெடுக்கும் திட்டங்கள் இலங்கைக்கு பொருத்தமுடையதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நாட்டை முடக்குமாறு பல்வேறு தரப்பினரும் விடுத்து வரும் கோரிக்கைகள் குறித்து அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார். நாட்டை முடக்கினாலும் மாதாந்த சம்பளம் பெறுவோர் சம்பளம் பெற்றுக் கொள்வார்கள் எனினும் நாளாந்த கூலித் தொழில்களில் ஈடுபடுவோர் பாதிக்கப்படுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கூலித் தொழிலாளிகள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்காக யாரும் குரல் கொடுப்பதில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடர் முடக்கத்தை இலங்கை தாங்காது!

*அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.30
நாட்டை தொடர்ந்து மூடி வைப்பதை இலங்கையால் தாங்க முடியாது என்று நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது மக்கள் தொகையில் பாதிப் பேரைப் பூட்டுவதால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்வது கடினம். இது நாட்டில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர வணிகத் துறையில் 4.5 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு மிகுந்த அழுத்தத்தை ஏற்படுத்தும்.

நாடு பூட்டப்பட்டதால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நாளாந்த இழப்பு ரூ .15 பில்லியனுக்கும் அதிகமாக உள்ளது. இலங்கை போன்ற ஒரு நாட்டை மூடுவதால் ஏற்படும் பொருளாதார தாக்கம் சிறியதல்ல. முடக்கத்தைக் குறைக்க அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். என்றார். (எ-இ)

தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னரும்

# தொற்றுப்பரவினால் என்ன செய்வது? ஆராய்வதற்கு மருத்துவ குழு நியமனம்

கொழும்பு, ஓக. 30
தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னரும் கொரோனா பரவுவது தொடர்ந்தால், அடுத்தகட்ட நடவடிக்கையை பரிந்துரைப்பதற்காக சிறப்பு மருத்துவ குழுக்களை நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, சுகாதாரத்துறை பிரதானிகளிடம் தெரிவித்துள்ளார். கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸ் 100 சதவீதமும், இரண்டாவது டோஸ் சுமார் 56 சதவீதமும் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி, இந்த மாத இறுதிக்குள் கணிசமான மக்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.

30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கா? அல்லது 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கா? பூஸ்டர் தடுப்பூசி போடுவதில் யாருக்கு முன்னுரிமை வழங்குவது என்பது குறித்து ஆராய்ந்து கருத்துக்களை முன்வைக்குமாறு சுகாதாரத்துறை பிரதானிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். (கு-இ)




திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
சாரங்கா நகை மாடம்
இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 2226972, 021 222 8869
நியூ சாரங்கா ஜுவலரி
இல.46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 0737


# தொற்றாளர்களை வீட்டில் வைத்து சிகிச்சை வழங்கல் வெற்றியளிப்பு

கொழும்பு, ஓக. 30
கொவிட் தொற்றுக்குள்ளான நபர்களுக்கு வீட்டில் வைத்தே சிகிச்சையளிக்கும் முறை சாதகமான பெறுபேற்றை தந்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்துள்ளார். கொவிட் தொற்றாளர்கள் குணமடைய நல்ல மன ஆரோக்கியத்தை பராமரிப்பது ஒரு முக்கிய காரணியாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஜூன் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வீட்டில் வைத்து சிகிச்சை அளிக்கும் முறையின் கீழ் 24 ஆயிரத்து 847 பேர் முழுமையாகக் குணமடைந்துள்ளதாக மருத்துவ நிபுணர் மேலும் குறிப்பிட்டார். (ஒ.இ)

# சுகாதார சேவைகள் பணிப்பாளர் மாற்றம்?

கொழும்பு, ஓக. 30
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன அப்பதவியில் இருந்து நீக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இப்பதவிக்கு மேல் மாகாண அரச மருத்துவமனை ஒன்றின் பணிப்பாளர் அல்லது சுகாதார விவகாரம் பற்றிய செயலாளர் பதவியை வகித்த ஒருவர் என இருவரது பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சால் இந்த நியமன நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. (ஒ.இ)

# முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகள்

*மாத்தளன் மீனவர்கள் குற்றச்சாட்டு*

முல்லைத்தீவு, ஓக.30
முல்லைத்தீவுக் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என்று மாத்தளன் மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு, இந்திய மீனவர்களின் நூற்றுக்கணக்கான இழுவைப் படகுகள் மாத்தளன் கடற்பகுதியில் காணப்பட்டன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று தெரிவித்த மாத்தளன் மீனவர்கள், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால் வலைகள் அறுக்கப்படுகின்றன என்றும், சிறிய மீன்கள் பிடிக்கப்படுவதால் கடல் வளம் அழிவடைகின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் வரையான கரையோர மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-19)





மன்னார், பேசாலையில் நீண்டகாலமாக வீட்டுத் தோட்டம் செய்துவரும், அல்போன்ஸ் பீரிஸ் என்பவரின் தோட்டத்தில் பப்பாசிகள் வித்தியாசமாகக் காய்த்துள்ளன. பப்பாசித் தண்டின் நடுப்பகுதியில் பூத்து காய்கள் உருவாகியுள்ளன. இன்னொரு மரத்தில் ஒரு பப்பாசிக் காயானது ஐந்து விரல்கள் உருவத்தில் காய்த்துள்ளது. (எ-60)

# 183 கிலோ கஞ்சா முருங்கனில் மீட்பு

மன்னார், ஓக.30
மன்னாரில் இருந்து வெளிமாவட்டத்துக்குக் கடத்திச் செல்லப்பட்ட கேரளக் கஞ்சா, முருங்கன் பகுதியில் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

183 கிலோ 715 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் வங்காலைப் பொலிஸார் தெரிவித்தனர். கஞ்சா கடத்தப் பயன்படுத்தப்பட்ட கூலர் வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

வங்காலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.ஐ.சுமணவீரவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து, மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ள வீரசிங்கவின் பணிப்பில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சி மற்றும் முருங்கன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எம். லயனல், பொலிஸ் பரிசோதகர் குமார, உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் உபாலி செனவிரத்ன, திசாநாயக ஆகியோர் தலைமையிலான அணியே இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.



விசாரணைகளின் பின்னர், சந்தேக நபர்கள் மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் தொற்றும் சாவும் இரு வாரங்களில் அதிகரித்துள்ளன

## மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் எச்சரிக்கை

வவுனியா, ஒக. 30

வவுனியா மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களில் அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றாளர்களும், அதனூடாக ஏற்படும் உயிரிழப்புகளும் எமது மாவட்டத்துக்கு பெரும் அச்சுறுத்தலாகும் என வவுனியா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் க.ராகுலன் தெரிவித்தார்.

வவுனியா மருத்துவமனையில் கொரோனா நோயாளர்களின் நிலைமைகள் தொடர்பில் அவரிடம் கேட்டபோது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மருத்துவமனையில் கடந்த இரு வாரங்களில் கொரோனாத் தொற்றாளர்களாக அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ஓகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து 14 ஆம் திகதி வரையான காலத்தில் 218 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 30 வீதமானவர்கள் ஒட்சிசன் தேவையுடையோராக காணப்பட்டிருந்தனர்.

இருந்தபோதும், ஓகஸ்ட் 15 ஆம் திகதியில் இருந்து 28 ஆம் திகதிவரை 500 நோயாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 55 வீதமானவர்கள் ஒட்சிசன் தேவையுடையோராக காணப்படுகின்றனர். இவர்களில் 17 பேர் குறித்த காலப்பகுதியில் உயிரிழந்துள்ளனர்.

கடந்த இரு வாரங்களில் தொற்றாளர்கள், ஒட்சிசன் தேவையுடையோர் மற்றும் உயிரிழப்புகள் என்பன, அதற்கு முந்திய இருவாரங்களுடன் ஒப்பிடுகையில், இருமடங்கைவிட அதிகரித்துள்ளமை எம்து மாவட்டம் மிக ஆபத்தான பிரதேசமாக மாறி வருவதனை சுட்டிக்காட்டுகின்றது.

மாவட்ட ரீதியில் பார்க்கும்போது ஓகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரையான காலத்தில் 618 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நிலையில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 15ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரையான இரு வாரங்களில் ஆயிரத்து 903 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், ஓகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 2ஆயிரத்து 500 வரையிலான தொற்றாளர்களும் 42 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. கொரோனாத்தொற்று ஆரம்பித்தகாலம் தொடக்கம் கடந்த ஜூன் மாதத்தொடக்கம் வரையான ஒன்றரை வருடங்கள் காலத்தில் 900 க்கும் குறைவான தொற்றாளர்களும் 13 உயிரிழப்புகளுமே பதிவாகியுள்ளன.

நாட்டின் பல மருத்துவமனைகளில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் சுகாதார பராமரிப்பு செயற்பாடுகள் கைமீறிப் போகக்கூடிய நிலையில், வவுனியா மருத்துவமனையின் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பான சேவையால் இதுவரையில் கொரோனாத் தொற்றாளர்களை சிறப்பாக பராமரித்து வரக்கூடியதாக உள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு பொது மக்கள் தமது பொறுப்பை உணர்ந்து செயற்படுவது, தாம் சார்ந்த சமூகத்தின் அனைத்து நோயாளிகளினதும் தேவைக்கேற்ப தடையற்ற சுகாதார சேவையை பெற்றுக்கொள்ள உதவும். தவிர, மக்களுக்கு பயத்தை ஏற்படுத்துவது தமது நோக்கல்ல. - என்றார். (து-110)

# மிக ஆபத்தான கட்டத்தில் புதுக்குடியிருப்பு நிலைமை

## மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக.30

**புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் அன்டிஜென் பரிசோதனையில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படும் நிலையில், பொதுமக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த புதன்கிழமை நூறு பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 25 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 29 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பலர் நோய்த் தொற்று அறிகுறிகளுடன் வீடுகளுக்குள் அடங்கியிருக்கின்றனர். தொற்று அறிகுறி உள்ளவர்கள் உடனடியாக மருத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு சிலரது அசமந்தப் போக்கால் புதுக்குடியிருப்பு பிரதேசமே முற்றாக பாதிப்படையும் நிலைமை ஏற்படலாம். நிலைமை கட்டுக்குள் அடங்காமல் போகுமானால் மருத்துவர்களால் கையாள முடியாத நிலைமை ஏற்படும். பொதுமக்கள் குறைந்தது இரண்டு வாரங்களாவது வீட்டை விட்டு வெளியே வராமல் இருப்பது அவசியம் என சுகாதார மருத்துவ அதிகாரி எம். கெங்காதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-இ)



# 16 மில்லியனில் சீரமைகிறது கிளி. அக்கராயன் குளம்

வன்னேரிக்குளம், ஒக. 30

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் 16 மில்லியன் ரூபா நிதியில் வேலைகள் நடைபெறுகின்றன என்று கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிசியந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீர்ப்பாசனத் திணைக்கள நிதியான 14 மில்லியன் ரூபாவில் அக்கராயன் குளத்தின் வான் பகுதியில் ஏற்பட்டுள்ள உடைவுகளை புனரமைத்தல், இடதுகரை வாய்க்காலில் புனரமைப்பு வேலைகள் என்பன நடைபெறுகின்றன. இதேவேளை, வேள்ட் விசனின் 02 மில்லியன் ரூபா நிதியில் கண்ணகைபுரத்தில் கழிவு வாய்க்கால்கள் துப்புரவுசெய்யும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளத்தில் ஜப்பானிய அரசின் 350 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் பெரும் புனரமைப்புப் பணிகள் 2010ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குளத்தின் அணைக்கட்டை உயர்த்துதல், குளத்தின் வான் பகுதியில் காணப்பட்ட பெரிய குழியை மூடுதல், இடது, வலதுகரை வாய்க்கால்களில் முக்கிய இடங்களில் கொங்கிறிட் வாய்க்கால்கள் அமைத்தல் போன்ற செயற்பாடுகள் நடைபெற்றிருந்தன.

அந்தக்காலப்பகுதியில் அக்கராயன் குளம் அதன் கீழான வாய்க்கால்களை முழுமையாக புனரமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதி தேவை என கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-13)



# நீர்த் தாங்கிக்குள் இருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

கொழும்பு, ஒக.30

நுவரெலியா, பிதுருதலாகல பேணட் இயற்கை வனப் பகுதியில் உள்ள 30 மீற்றர் உயரமான லவர்சிலீப் இயற்கை நீர்வீழ்ச்சிப் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள பிரதான தண்ணீர் தாங்கியில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் ஆவா எலிய பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் கிடக்கும் பிரதான தாங்கியிலிருந்து மக்களின் குடி தண்ணீர்ப் பாவனைக்காக வெளியேறும் தண்ணீரைத் தடை செய்து, சடலத்தை மீட்ட பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-இ)

# உணவு வழங்கலைத் தொடர நிதியை விடுவிக்கவேண்டும்

## ப.நோ.கூ. சங்கங்களின் நிர்வாகத்தினர் மாவட்ட, பிரதேச செயலர்களிடம் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உணவுப் பொருள்களைக் கொள்வனவுசெய்து வழங்குவதற்கு நிதி வழங்கவேண்டும் என்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொவிட்-19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உணவு வழங்கலை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடுகின்றன. அவை, தனியார் கடைகளில் தவணை அடிப்படையில் கடனுக்கு உலருணவுப் பொருள்களைப் பெற்று தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு விநியோகிக்கின்றனர். அதனைத் தொடர்ச்சியாக வினைத்திறனாகச் செயற்படுத்த பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகம் என்பன விரைவாக பணத்தைப்பெற்று சங்கங்களுக்கு வழங்கவேண்டும். தாமதமாகும் போது, தனியார் கடைகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான உணவுப் பொருள்கள் வழங்கலை இடைநிறுத்தியுள்ளன. சங்கங்கள் உணவு வழங்கலிலிருந்து ஒதுங்குகின்ற நிலைமை காணப்படுகின்றது. சங்கங்களிடமும் பணம் இல்லை. இந்தநிலையில் மாவட்டச் செயலாளர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முற்பணம் வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொருள்களை விரைவாக வழங்கக் கூடியதாக இருக்கும் என்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தினர் கூறுகின்றனர். (து-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அன்டிஜென் சோதனையில்

# யாழ்ப்பாணத்தில் தொற்றுடன் 157 பேர் இனம்காணப்பட்டனர்

## 5 நாள்களில் 1264 தொற்றாளர்கள்

**யாழ்ப்பாணம், ஓக. 30**




**யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையில் 157பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுடன் சேர்த்து கடந்த 5 நாள்களில் அன்டிஜென் சோதனையில் மாத்திரம் ஆயிரத்து 264 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4பேரும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 22பேரும்,. சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 51பேரும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 20பேரும், காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8பேரும், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 25பேரும், மருதங்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேரும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9பேரும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 14பேரும் என 157 பேர் நேற்றுமுன்தினம் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(ஒ.5,9,159)

# மீளக்குடியமராத மக்கள் காணிகளை பதிவுசெய்யுங்கள்

## வலி.வடக்கு தவிசாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 30

உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியமராத மக்கள், உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுங்கள் என்று வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

முப்படையினர் மற்றும் பொலிஸாரின் பாவனையிலுள்ள தனியார் காணிகளில் மீளக்குடியமராத குடும்பங்களின் விவரங்களை யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் பெற்றுக்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கேட்டபோது, அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெயர்ந்து பல வருடங்களாக மீள்குடியேறாத குடும்பங்களை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மாவட்டச் செயலகங்கள் ஊடாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்தவரை வலிகாமம் வடக்கிலேயே அதிகளவில் மக்கள் முப்பது வருடங்களுக்கு மேலாக மீள் குடியேற்றப்படாமல் இருக்கின்றார்கள். 18 கிராம அலுவலர் பிரிவுகள் பகுதியளவில் விடுவிக்கப்படாமலும் 3 கிராம அலுவலர் பிரிவுகள் முழுமையாக விடுவிக்கப்படாமலும் உள்ளன.

7ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்னமும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் நலன்புரி நிலையங்களிலும் தங்கியுள்ளனர். இதனடிப்படையில், வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மூலம் இந்த விண்ணப்பப் படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஆகிய இடங்களில் விண்ணப்பப்படி வங்களை பெற்று உடனடியாக நிரப்பி வழங்குங்கள். இதனை வழங்குவதன் மூலமே மீள்குடி யேற்றத்தை துரிதப்படுத்தி பொதுமக்களின் காணிகள் எவ்வளவு என்பதை அடையாளப்படுத்த முடியும்.

மீள்குடியேற்றத்துக்காக மக்கள் இல்லை என்ற கருத்துக்கள் வெளியாகிவரும் நிலையில், உண்மையான தகவல்களை வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஏற்கனவே விவரங்களை வழங்கி இருந்தாலும் இந்தமுறை கட்டாயமாக பதிவுசெய்ய வேண்டும். இந்தத் தகவல்கள் சரியாகப் பேணப்படாமையால் மீள்குடியேற்றம் தாமதமாகி வருகிறது.

பகுதியளவில் விடுவிக்கப்பட்ட நகுலேஸ்வரம், காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை மத்தி, காங்கேசன்துறை தெற்கு, கட்டுவன், குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு, வசாவிளான் கிழக்கு, வசாவிளான் மேற்கு, மயிலிட்டித்துறை வடக்கு, தையிட்டி வடக்கு, தையிட்டி தெற்கு, பலாலி கிழக்கு, பலாலி தெற்கு, பலாலி வடக்கு ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளையும் முழுமையாக விடுவிக்கப்படாத பலாலி மேற்கு, பலாலி வடமேற்கு, மயிலிட்டித்துறை தெற்கு கிராமஅலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த மக்களும் உடனடியாக விண்ணப்பிக்க வேண்டும் - என்றார்.

(து-20)


# தனிமைப்படுத்தப்படும்போது உலருணவுப்பொதி வழங்குங்கள்

வன்னேரிக்குளம், ஓக. 30

கொவிட் 19 என உறுதிசெய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்படுகின்ற குடும்பங்களுக்கான 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகளை தனிமைப்படுத்தும் காலத்தில் வழங்குவதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கொவிட் - 19 காரணமாக திடீரென தனிமைப்படுத்தப்படும் குடும்பங்கள், தனிமைப்படுத்தப்படும் காலங்களில் உணவுப் பொருள்களை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றன. உணவுப் பொருள்களை பணம்கொடுத்து பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் இல்லாத நிலைமையில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களில் சிறுவர்கள், மகப்பேற்றுக்குரிய பெண்கள், முதியவர்கள் என பலரும் இருப்பதன் காரணமாக தனிமைப்படுத்தப்படும் காலங்களில் உணவு நெருக்கடியை வறுமையான குடும்பங்கள் எதிர்கொள்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட காலம் நிறைவடைந்த பின்னர்தான் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதி வழங்கப்படுகின்றது. எனவே, தனிமைப்படுத்தப்படும் காலத்தில் உலருணவுப் பொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். தனிமைப்படுத்தப்படும் குடும்பங்கள் தொடர்பான விவரங்களை சுகாதாரத் தரப்பினர் மாவட்டச் செயலகத்துக்கு வழங்கி உணவுப் பொருள்கள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

(து-13)









# மூவர் நினைவாக குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஓக. 30

இணுவில் பகுதியில் அகால மரணமடைந்த மூன்று இளைஞர்களின் ஞாபகார்த்தமாக குருதிக்கொடை நிகழ்வு இணுவில் அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இணுவில் பாலாவோடை இளைஞர் கழகமும் விதை அனைத்தும் விருட்சமே அமைப்பும் இணைந்து இந்த ஏற்பாட்டை செய்திருந்தன.

(து-20)


## பைஸர் தடுப்பூசி வழங்கலை

# சுகாதாரத்துறையிடமிருந்து பிடுங்கியது இராணுவம்

கொழும்பு, ஓக. 30

கொரோனா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பைஸர் தடுப்பூசி வழங்குவதை நிர்வகிக்க இராணுவத்திற்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் உட்பட பல பகுதிகளில் பல்வேறு முறைகேடுகள் பற்றிய செய்திகள் உள்ளிட்ட அனைத்து காரணிகளையும் கருத்தில்




கொண்டு, இனிமேல், பைஸர் தடுப்பூசி இராணுவத்தின் தலைமையில் வழங்கப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

சரியான நடைமுறைக்கு வெளியே, தடுப்பூசி பெற தகுதியற்ற எந்தவொரு நபருக்கும் பைஸர் தடுப்பூசி வழங்கப்பட மாட்டாது என்று அவர் குறிப்பிட்டார்.

(ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பு

## வலுச்சேர்க்குமாறு தமிழக முதலமைச்சருக்கு நாடு கடந்த தமிழீழ அரசு அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

**தமிழ்நாட்டில் அரசியல் தஞ்சம் புகுந்து நீண்டகாலமாக கடும் நெருக்கடிக்குள் வாழ்ந்து வருகின்ற ஈழத்தமிழ் அகதிகளின் நலனுக்காக, தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட சிறப்பு அறிவிப்புகளை வரவேற்பதாக தெரிவித்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசு, ஈழத்தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான பொறிமுறையாக பொதுவாக்கெடுப்புக்கு வலுச்சேர்க்குமாறு கோரியுள்ளது.**


இலங்கைத் தமிழர் அகதிமுகாம் என்பதற்கு பதிலாக இனி, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என அழைக்கப்படும் என சட்டப்பேரவையில் அறிவித்துள்ள தமிழ்நாட்டு முதல்மைச்சர் மு.க.ஸ்டாலின், சிறப்பு அறிவிப்புக்களையும் வெளியிட்டிருந்தார்.

ஈழத்தமிழர்கள் முகாம்களில் உள்ள 7 ஆயிரத்து 469 பழுதடைந்த வீடுகளுக்கும் பதிலாக 231 கோடி ரூபாய் செலவில் புதியவீடுகள். சாலைகள், குடிநீர் வசதி சீரமைப்பு. விலையில்லா எரிவாயு அடுப்பு இணைப்பு. குழந்தைகள் கல்விக்கு 5 கோடி ரூபா ஒதுக்கீடு. பொறியியல் படிக்க தேர்ச்சி பெற்ற மாணவர்களில் மதிப்பெண் அடிப்படையில் முதல் 50 பேரின் கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை தமிழக அரசே ஏற்கும். முதுநிலை படிக்கும் மாணவர்களின் கல்விச் செலவுகளையும் அரசே ஏற்கும். தொழிற்கல்வி படித்து வரும் மாணவர்களுக்கு உதவித்தொகை உயர்வு. பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ரூ.2 ஆயிரத்து 500லிருந்து ரூ.10 ஆயிரமாகவும், கலை அறிவியல் மாணவர்களுக்கு ரூ.3 ஆயிரத்திலிருந்து ரூ.12 ஆயிரம் ஆகவும், இளநிலை தொழிற்கல்வி மாணவர்களுக்கு ரூ.5 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரம் ஆகவும் உதவித்தொகை உயர்வு.

இலங்கை அகதிகள் முகாம்களின் அடிப்படைக் கட்டமைப்புகளுக்கு இனி ஆண்டுதோறும் ரூ.5 கோடி ஒதுக்கீடு. ஈழ அகதிகளுக்கு குடியுரிமை வழங்குவது, சொந்த நாட்டிற்கு செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் என்போரை உள்ளடக்கிய குழு அமைக்கப்படும் என்ற சிறப்பு அறிவிப்புக்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

நீண்டகாலமாக பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் ஈழத் தமிழ் அகதிகளின் நலன்களுக்காக தமிழ்நாட்டு அரசின் இந்த அறிவிப்புக்களை வரவேற்பதாக நாடுகடந்த தமிழீழ அரசின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

திருச்சி சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விரைந்து முடிக்க காவற்துறைக்கு அறிவுறுத்தியுள்ளமையை சுட்டிக்காட்டியுள்ள அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு, இச்சிறப்பு முகாமில் உள்ள ஈழத்தமிழர்கள் அனைவரையும் அகதிகளாக ஏற்றுக் கொண்டு அவர்களை விடுவிக்க தமிழ்நாடு அரசு ஆவன செய்ய வேண்டுவதாகவும் கோரியுள்ளது. ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பை வலியுறுத்தி தமிழ்நாட்டு சட்டப்பேரவையில் முன்னராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடியொற்றி, பொதுவாக்கெடுப்புக்கான மக்கள் இயக்கத்துக்கு தமிழ்நாட்டு அரசின் உறுதுணையை வேண்டுவதாக தெரிவித்துள்ள அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு, இலங்கைதீவில் ஈழத்தமிழ் மக்கள் சுதந்திரமும் அரசியல் இறைமையும் கொண்டு வாழ்வதற்கான அரசியல் தீர்வு அம்மக்கள் தாங்களே தீர்மானிக்கின்ற வகையில் பொதுவாக்கெடுப்பு பொறிமுறையாக அமையும் எனத் தெரிவித்துள்ளது. (ஓ-5)




## குழந்தைகள் கிளினிக்கில் தனியாள் இடைவெளி வேண்டும்

பளை, ஓக. 30

பளைப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து ஏற்றுவதற்கு சென்றிருந்த சுமார் 150க்கும் மேற்பட்டவர்கள், அங்கு தனியாள் இடைவெளியைப் பேண முடியாத நிலையை நேற்றுமுன்தினம் எதிர்கொண்டனர். எனவே, கொரோனா காலத்தில் பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் குழந்தைகள் கிளினிக் தொடர்பாக மாற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அங்கு குழந்தைகளைக் கூட்டிச் சென்ற பெற்றோர்கள் மண்டபத்தின் உள்ளேயும் வெளியே வெயிலுக்கு மத்தியிலும் கால்கடுக்க நின்றிருந்ததாக விசனம் தெரிவித்தனர்.

மாதாந்தம் நான்காவது சனிக்கிழமையில் பளைப் பிரதேசத்தில் ஐந்து வயதுக்குக்குட்பட்ட குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் நடைபெறுவது வழமை. (த-159)

# கொரோனா நிலைமை பற்றிய தகவல்களை வழங்க முடியாது

## வவுனியா சுகாதார அதிகாரிகள் தெரிவிப்பு



வவுனியா. ஓக. 30

வவுனியா மாவட்டத்தின் கொரோனா நிலைமைகள் தொடர்பாக உத்தியோகபூர்வமான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்க முடியாது என வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் அது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியா பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையில் நேற்று நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் வவுனியா மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள், ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மாவட்டத்தின் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் அதனால் உயிரிழப்பவர்கள் தொடர்பான உத்தியோகபூர்வமான தகவல்களை ஊடகவியலாளர்களுக்கு வழங்குமாறு கோரப்பட்டிருந்தது. அதனை மறுத்த அதிகாரிகள் அவ்வாறு தகவல்களை வழங்குவதற்கு தமக்கு அதிகாரம் இல்லை என்றும் மீறி வழங்கினால் தாம் விசாரணைக்கு உட்படுத்தப்படுவோம் என்றும் தெரிவித்தனர்.

ஆயினும், வடக்கின் ஏனைய மாவட்டங்களில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் ஊடக சந்திப்புக்களின் மூலம் மாவட்டத்தின் கொரோனா நிலைமை தொடர்பாக கருத்துத் தெரிவித்துவருகின்றமை பற்றி ஊடகவியலாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

எனினும், தாம் வழங்கமாட்டோம் என்று அவர்கள் தெரிவித்தனர். வவுனியா மாவட்டத்தில் கொரோனாத்தொற்று அதிகரித்துவரும் நிலையில் அது தொடர்பான உத்தியோகபூர்வமான, உண்மையான தகவல்களை பொதுமக்கள் மத்தியில் எடுத்துச்செல்வதில் ஊடகவியலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-110)

# 6 மாதங்களாக பணி எதுவுமின்றி அரச சம்பளம் பெறும் ஊழியர்கள்

கொழும்பு, ஓக. 30

ஒரு வருடத்திற்கும் மேலாக ஒரு தினம் கூட கடமைக்கு சமுகமளிக்காத பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உள்ளடங்கலாக 6 மாதங்களாக ஒரு நாள்கூட பணிக்குச் செல்லாத பெருமளவான அரச ஊழியர்கள் இருப்பதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. இருப்பினும் அவர்கள் அனைவருக்கும் இதுவரையில் சம்பளம் வழங்கப்பட்டு வருவதாக அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், உயர் அதிகாரிகள் சில மணிநேரங்களுக்கு மாத்திரம் கடமைக்கு வந்துவிட்டு போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகளை பெற்றுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அவர்கள் அலுவலகங்களில் சுமார் 2, 3 மணித்தியாலங்கள் மாத்திரமே இருந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக பல தனியார் நிறுவனங்கள் பணியாளர்களின் கடமை நேரத்திற்கு அமைவாக சம்பளத்தை செலுத்தி வந்துள்ளன. மேலும் சில நிறுவனங்கள் எவ்விதமான மேலதிக கொடுப்பனவுகளும் இன்றி அடிப்படைச் சம்பளத்தை மட்டும் ஊழியர்களுக்கு வழங்கி வந்துள்ளன. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## அர்த்தமற்ற தியாகம்

'நாட்டை முடக்குவதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை ஈடுசெய்வதற்காக தியாகம் செய்வதற்கு இலங்கை மக்கள் தயாராக இருக்க வேண்டும்' என ஜனாதிபதி கோத்தாபய அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது கோரிக்கை விடுத்திருந்தார். ஏற்கனவே பொருளாதாரச் சிக்கலில் உழன்று கொண்டிருக்கும் இலங்கையை கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து மீட்டெடுக்க பலரும் முடக்கத்தை அமுல்படுத்துமாறு கோரிய போதும், அவற்றுக்கு ஏன் செவிசாய்க்கவில்லை என்பதே ஜனாதிபதியின் உரையின் சாராம்சமாக இருந்தது. இவ்வளவு பிரச்சினைகள் இருந்தும் நாட்டை முடக்கினால், நாட்டின் பொருளாதாரம் இன்னும் அதலபாதாளத்துக்குப் போகும், எனவே அந்த நிலையைத் தவிர்க்க மக்கள் பல தியாகங்களைச் செய்யவேண்டியிருக்கும் என அந்த உரையில் அவர் கோடுகாட்டியிருந்தார். ஆனால் அந்தத் தியாகம் எத்தகையது என்று ஜனாதிபதி தன்னுரையில் சொல்லவேயில்லை. எனினும், அடுத்து வந்த நாள்களில் நிகழ்ந்த சம்பவங்கள் அந்தத் தியாகம் என்ன என்பதை சொல்லாமல் சொல்லிச் சென்றன.

நாட்டை முடக்க முன்னரே, அமைச்சர்கள் சிலர் 'அரச ஊழியர்கள் தமது ஒரு மாத வேதனத்தை விட்டுக் கொடுத்தால் நாட்டை முடக்கலாம்' என்கிற ரீதியில் கருத்துக்கூறியிருந்தனர். நாடு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் என்று வெறும் பெயரளவுக்கு முடக்கப்பட்ட பின்னர், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் ஒருமாதச் சம்பளத்தை 'கொவிட் நிதியத்துக்கு' வழங்குவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. கிட்டத்தட்ட குரங்குகளிடம் தான் பறிகொடுத்த தொப்பிகளை மீட்க வியாபாரி செய்த தந்திரத்துக்கு ஒப்பானதே இந்தச் செயல். ஆளுங்கட்சி எம்.பிக்கள் தங்கள் சம்பளத்தை 'கொவிட் நிதியத்துக்கு' கொடுத்தால், அதைப் பார்த்து எதிர்க்கட்சியினரும் கொடுப்பார்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கொடுப்பார்கள், இறுதியில் அரச உத்தியோகத்தர்களும் தமது சம்பளத்தை விட்டுக் கொடுப்பார்கள் என்று அரசாங்கம் கணக்குப் போட்டது. ஆனால் அந்தக் கணக்கு இப்போது ஆரம்பத்திலேயே பிசகிவிட்டதுதான் பரிதாபம்.

ஆளுங்கட்சி எம்.பிக்களான டிலான் பெரேரா, எஸ்.பி.திஸநாயக்க உள்ளிட்ட சிலர் தங்கள் மாதச் சம்பளத்தை வழங்கினரல் குடும்பத்தைக் கொண்டு நடத்தமுடியாது என்பதால், தாங்கள் ஒருபோதும் அதனை வழங்க முடியாது என்று அப்பாவிகளாக கசிந்து கண்ணீர் மல்கி சொல்லியிருக்கிறார்கள். அதிகளவான சலுகைகளையும், வசதிகளையும், நல்ல சம்பளத்தையும் பெற்று அனுபவித்துக்கொண்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களே, தமது மாதச் சம்பளத்தை விட்டுக் கொடுத்தால் வாழவே முடியாது என்று கண்ணீர் வடிக்கையில், சாதாரண அரச ஊழியர்களால் மட்டும் எப்படிச் சம்பளத்தை விட்டுக் கொடுத்துவிட்டு வாழ்க்கையைக் கொண்டு நடத்தமுடியும்? அதுவும் விலைவாசி எந்தவிதத் தடையுமில்லாமல் உச்சாணிக் கொப்பில் ஏறி நின்று ஆட்டம் போடுகையில், கையில் கிடைக்கும் சம்பளத்தை வைத்து கஞ்சி மட்டுமே குடிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ள நிலையில், அரச ஊழியர்கள் தங்கள் வேதனத்தை முழுமையாகவோ, பகுதியாகவோ விட்டுக் கொடுத்தால் அவர்களது குடும்பங்கள் பட்டினியால் பரிதவிக்க வேண்டியதுதான்.

எல்லாப் பேரிடர்களின் போதும் புறக்கணிப்புக்கு உள்ளாவது இந்த அரச ஊழியர்களே. போரின் போதும் சரி, இயற்கை அனர்த்தங்களின் போதும் சரி, இப்போது கொரோனாப் பெருந்தொற்றின் போதும் சரி, பாதிக்கப்பட்டவர்களில் அரச ஊழியர்கள் இருந்தாலும் அவர்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைப்பதில்லை. காரணம், அவர்கள் அரச ஊழியர்கள் என்பதால் பொருளாதார ரீதியாக அவர்களுக்கு பாதிப்பு வராது என்ற கருதுகோளே. ஆனால், பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்து அனுப்பும் இலட்சக் கணக்கான பணத்தை வருமானமாகக் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கோ நிவாரணம் தாராளமாகக் கிடைக்கும். இப்படி எப்போதும் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணங்களில் புறக்கணிக்கப்படும் அரச ஊழியர்களின் ஒரேயொரு நம்பிக்கையான மாதச் சம்பளத்தையும் 'தியாகம் ' என்ற போர்வையில் ஆட்டையைப் போட நினைக்கிறது கோத்தாபய அரசாங்கம். அதற்காகவே ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சம்பளத்தை தியாகம் செய்தது போல அரச ஊழியர்களும் செய்வார்கள் என அரசாங்கம் நாடகம் போடுகின்றது. நல்லவேளையாக அந்த நாடகம் முதல் காட்சியிலேயே குழம்பிவிட்டது. இல்லாவிட்டால் பலவந்தமாகவேனும் அரச ஊழியர்களின் சம்பளத்தைப் பிடுங்கி தன் பொக்கற்றை நிறைக்கும் கைங்கரியத்தை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும். தியாகம் என்பது தானாக நிகழவேண்டுமே தவிர, இன்னொருவரை வலிந்து, துன்புறுத்தி செய்ய வைப்பதல்ல. முதலில் அரசாங்கம் தியாகம் என்பதற்கான அர்த்தம் என்ன என்பதை அறியட்டும். அதன் பின்னர் தியாகத்தைப் பற்றி பேசட்டும்.




# அடையாளம் காணப்படுபவர்களைவிட 5 மடங்கு தொற்றாளர்கள் சமூகத்தில்

## அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார் தொழில் வல்லுநர் அமைப்பின் தலைவர்

**கொழும்பு, ஓக. 30**

**தற்போது பி.சி.ஆர். உள்ளிட்ட பரிசோதனைகளின் ஊடாக அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்களை விட 5 மடங்கு அதிகமான கொரோனா நோயாளர்கள் சமூகத்தில் இருப்பதாக சுகாதார தொழில் வல்லுநர்கள் அமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.**



சுகாதார அமைச்சின் தவறான அணுகுமுறை காரணமாக 80 வீதம் எதிர்மறையான விளைவுகளே இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் பரிசோதனைகளின் ஊடாக கண்டறியும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 15.8 சதவீதம் மட்டுமே ஆகுமெனவும், இதைவிட 5 மடங்கு அதிகமான கொரோனா நோயாளர்கள் சமூகத்தில் இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நோயாளர்களை கண்டறிய முடியாத காரணத்தால் 5 சதவீதத்துக்கு குறைவானவர்கள் மருத்துமனையில் அனுமதிக்கும் முன்பே உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொற்றுநோயியல் நிபுணர்களும் அரசியல்வாதிகளும் ஜனாதிபதிக்குத் தவறான பாதையைக் காட்டி வருவதாகவும், சுகாதார அமைச்சின் தவறான கொள்கைகளால் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்தால் அரசால் சமாளிக்க முடியாமல் போகுமெனவும் அவர் தெரிவித்தார்.

(ஒ,இ)

# நகர குளத்தைத் தூர்வார வர்த்தகர் ஒருவர் நிதி



யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாண மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள குளங்களைத் தொடர்ச்சியாக தூர்வாரி அழகுபடுத்தும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

அந்தவகையில், யாழ். நகரில் இருக்கும் நகரக்குளம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவருடைய நிதிப் பங்களிப்பில் தூர்வார்ப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனின் முயற்சியில் குறித்த குளங்களுக்குரிய வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(து-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா, அமெரிக்காவை திசைதிருப்ப இலங்கை திட்டம்

## கூட்டமைப்புடன் நெருங்கும் காரணத்தை வெளியிட்ட தயான்

**கொழும்பு, ஓக.30**

**இலங்கையில் சீனாவின் மூலோபாய நடவடிக்கைகளிலிருந்து அமெரிக்கா, இந்தியா ஆகியவற்றை திசை திருப்பவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு நெருங்கிவருகின்றது என்று எதிர்க்கட்சியின் வெளிநாட்டு உறவுகளுக்கான சிரேஷ்ட ஆலோசகரும் இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடைமுறைச் சாத்தியமான 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறையாக்கும் கோரிக்கையை கைவிட்டு அதற்கு அப்பாலான விடயங்கள் பற்றி பேசுவதும் கடந்த கால விடயங்களை மீளவும் வலியுறுத்திக்கொண்டிருப்பதும் மீண்டும் ஒரு தடவை காலத்தை வீணடிக்கும் செயற்பாடாகவே அமையும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடைமுறைச்சாத்தியமற்ற விடயங்களை முன்வைத்துக்கொண்டிருப்பதால் அவர்களின் விடயத்தில் எவ்வித மான ஆரோக்கியமான நிலைமைகளும் ஏற்படாது. வடக்கு, கிழக்கில் இராணுவமயமாக்கல், சிங்கள மயமாக்கல் ஆகியவற்றுக்கு அப்பால் சீன மயமாக்கலும் உருவெடுக்கும் ஆபத்துக்கள் நிறையவே உள்ளன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அரசாங்கம் பொருளாதார ரீதியில் அடுத்து வரும் காலத்தில் மிகுந்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவுள்ளது. இலங்கைக்கு சீனாவின் உதவிகளைத் தாண்டி மேற்குலகத்தின் உதவிகளும் நன்கொடைகளும் அவசியமாக இருக்கின்றன. ஆனால் சீனா இலங்கையில் அதீதமாக பிரசன்னம் அடைந்துள்ளதோடு தனது மூலோபாய செயற்பாடுகளுக்கு இலங்கையை பயன்படுத்துமளவுக்கு நிலைமைகள் காணப்படுகின்றன. இது இந்துசமுத்திர பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்தும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பிரச்சினையான விடயமாகின்றது.

அதனால் தமிழர்களின் இனப்பிரச்சினை விடயத்துக்குத் தீர்வளிக்க வேண்டும் என்று இந்தியா அரசை அழுத்தமாக வலியுறுத்துகின்றது. மறுபக்கத்தில் அமெரிக்கா தனது மேற்குலக சகாக்களுடன் இணைந்து பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கைக்கு நெருக்கடிகளை ஏற்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. இவ்வாறானதொரு நிலையில் தான் அரசாங்கம் இந்தியாவையும் அமெரிக்காவும் திசை திருப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அரசு பேச்சுக்கு அழைக்கின்றது என்பதில் நம்பிக்கை வைத்து அதியுச்ச கோரிக்கைளை முன்வைத்துக் கொண்டிருப்பதானது ஆபத்துக்களையே ஏற்படுத்தும். முக்கியமாக வடக்கு கிழக்கில் தற்போது முன்னெடுக்கப்படும், இராணுவமயமாக்கல், சிங்களமயமாக்கல் ஆகியவற்றுக்கு மேலதிகமாக சீனமயமாக்கலும் தோற்றம் பெறும் ஆபத்துக்கள் இல்லாமல் இல்லை. முதலில் மாகாண சபை அதிகாரங்களை கையில் எடுத்துக்கொண்டு இராஜதந்திர மூலோபாய நகர்வுகளை கூட்டமைப்பு மேற்கொள்வதே பொருத்தமானதாகும் - என்றார். (எ-இ)



## நெல் உலரவிடும் தளங்கள் முல்லையில் அதிகளவில் தேவை

வன்னேரிக்குளம், ஓக. 30

முல்லைத்தீவில், கிராமங்களில் போதியளவு நெல் உலரவிடும் தளங்கள் இல்லாதமையால், வீதியில் நெல் உலர விடும் நிலை தொடர்கின்றது என்று கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

விவசாயத் துறையில் கடந்த பத்தாண்டுகளில் பெரும் முன்னேற்றம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது. நிலத்தைப் பண்படுத்துதல், விதைப்புகள், இயந்திரங்கள் மூலம் அறுவடை என்பன இடம்பெற்றாலும் நெல் உலரவிடும் தளங்கள் கிராமங்களில் போதியளவில் காணப்படவில்லை. அதனால், விவசாயிகள் நெல் மூடைகளை வீதிகளுக்கு எடுத்துவந்து உலர விடும் நிலை காணப்படுகின்றது.

நெல் உலர விடுவதற்கான வசதிகள் இல்லாதமையால் அறுவடை முடிந்தவுடன் நெல்லை பேரம்பேசும் சக்தியற்ற நிலையில் குறைந்த விலையில் விற்பனை செய்யவேண்டிய நிலை தொடருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கூடுதலானளவில் நெல் உலரவிடும் தளங்கள் அமைக்கப்பட வேண்டும். களஞ்சியங்கள் அமைக்கப்பட வேண்டும். தனியார் செல்வதற்கு முன்னரே நெல் சந்தைப்படுத்தும் சபைகள் கிராமங்களுக்குச் சென்று நெல் கொள்வனவு செய்யவேண்டும். இவ்வாறான முயற்சிகள் எடுக்கப்பட்டால்தான் நெல் உற்பத்தியில் முல்லைத்தீவு மாவட்டம் தன்னிறைவு அடையும் என்று பிரதேச சபைத் தவிசாளர் மேலும் தெரிவித்தார். (த-13)



## ஜே.சி.பியில் சிக்கி சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.30

ஜே.சி.பி. இயந்திரத்தில் சிக்கி 12 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பனாமுர, கடுவன வீதியில் உள்ள கமகந்த பிரதேசத்தில் நடந்துள்ளது.

கற்களை ஏற்றிய லொறி ஒன்றை ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் தள்ளிச் சென்றபோது லொறியில் ஏற முற்பட்ட சிறுவன் ஜே.சி.பி. இயந்திரத்தின் சில்லில் சிக்கி உயிரிழந்துள்ளான் என்று தெரிவிக்கப்படுகிறது.

தடயம்கந்த ஓமல்பே பிரதேசத்தை சேர்ந்த சிறுவன் ஒருவனே உயிரிழந்துள்ளான் என்றும், ஜே.சி.பி. சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## அரியாலையில் குண்டு மீட்பு

கொழும்பு, ஓக. 30

யாழ்ப்பாணம் அரியாலை ஜே/96 கிராம அலுவலர் பிரிவில் வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டு ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டறியப்பட்டது. அதனை அவதானித்த பொதுமக்கள் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அங்கு சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-20)



## படகு மூலம் இந்தியாவுக்குள் நுழையவுள்ள இலங்கையர்!

### தமிழகத்தில் கடும் பாதுகாப்பு

கொழும்பு, ஓக.30

இலங்கையர்கள் குழுவொன்று தமிழகத்துக்குள் மீன்பிடி படகுகள் மூலம் வரவுள்ளது என்று உளவுத்துறை அளித்த தகவலை அடுத்து கேரளக் கடற்கரையில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடலோர பொலிஸாருடன், கடலோர காவல்படையினர் இணைந்து ரோந்துப் பணியை தீவிரப்படுத்தியுள்ளனர். தமிழகத்தை அடைந்த பிறகு, அவர்கள் சாலை வழியாக கொச்சிக்கு செல்வதற்கான என்று அறிகுறிகள் உள்ளன. அதன்பிறகு கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி மீன்பிடிப் படகுகளில் வெளிநாட்டுக்குப் பயணம் செய்வது அவர்களின் நோக்காக இருக்கும் என்றும் இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (எ-இ)

## பிளாஸ்ரிக் தடைக்கான அமைச்சரவைப் பத்திரம்!

கொழும்பு, ஓக.30

ஒரு முறை பாவித்து நீக்கப்படும் ஏழு வகையான பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் உற்பத்திகளை தடை செய்வதுடன் தொடர்புடைய அமைச்சரவைப் பத்திரம் ஒன்று, இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இவற்றுள், பிளாஸ்ரிக்கால் தயாரிக்கப்படும் பானம் [illegible] குடிநீர்க் கோப்பை, கேக் வெட்டும் கத்தி, இடியப்பத் தட்டு, பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீனால் தயாரிக்கப்பட்ட பூமாலைகள் ஆகியன உள்ளடங்குகின்றன.

கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதியில் இருந்து "செசெ" பக்கெற்றுக்கள் உள்ளிட்ட ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் உற்பத்திப் பொருள்களை தடை செய்ய சுற்றுச்சூழல் அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

அதேபோல், ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து உக்காத லஞ்சீற்றைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஆண்டுதோறும் 2 பில்லியனுக்கும் அதிகமான பொலித்தீன் பைகள் கொட்டப்படுகின்றன என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினோபார்முக்கு எதிராக அநாமதேய துண்டுப்பிரசுரம்

*விநியோகித்தவர்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவு தீவிர விசாரணை*

**யாழ்ப்பாணம், ஓக. 30**

**கொரோனாவுக்கு எதிராக தற்போது வழங்கப்படும் சினோபார்ம் தடுப்பூசி தொடர்பில் பொய்யான தகவல்களை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரம் யாழ்ப்பாண மாவட்டத்தின் சில இடங்களில் விநியோகிக்கப்பட்டு வருவது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டத்தை குழப்புவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை அவர்கள் தீவிரப்படுத்தியுள்ளனர்.**

விநியோகிக்கப்படும் துண்டுப்பிரசுரத்தில், வடக்கு கிழக்கு மாகாணங்களை வஞ்சிக்கும் வகையில் சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் சீனாவே கொரோனாவைப் பரப்பியது என்றும் வியாபார தந்திரத்துக்காக மக்களை அழிப்பதற்காகவே அதனை உருவாக்கியது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் சினோபார்ம் தடுப்பூசி உலக சுகாதார நிறுவனத்தால் அனுமதிக்கப்படாத ஒன்று என்றும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் சினோபார்ம் தடுப்பூசி உலக சுகாதார நிறுவனத்தின் அனுமதியைப் பெற்ற ஒன்று என்பதுடன், உலக சுகாதார நிறுவனம் அனுமதி வழங்கிய பின்னரே சினோபார்ம் தடுப்பூசி ஏற்றல் இலங்கையில் ஆரம்பமாகியது.

இந்த நிலையில் மக்களைக் குழப்பியடிக்கும், தடுப்பூசியேற்றலுக்கு தடையேற்படுத்தும் இத்தகைய துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்தவர்கள் மற்றும் அவற்றை விநியோகித்தவர்களைத் தேடிக்கண்டறியும் நடவடிக்கைகளில் பொலிஸ் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுகள் களமிறங்கியுள்ளன. (ஒ,5,159)

## நிர்வாணப் புகைப்படத்தை காட்டி மிரட்டியோர் கைது



கொழும்பு, ஓக. 30

பெண் ஒருவரின் நிர்வாணப் படத்தைக் காட்டி அச்சுறுத்தி, கப்பம் கோர முயன்ற சம்பவம் தொடர்பில் இரண்டு பேர் எம்பிலிப்பிட்டிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகநூல் மூலம் பெண்ணொருவரின் புகைப்படத்தை பெற்று, அதனை நிர்வாணப் படமாக திரிபுபடுத்தி, முகநூல் உள்ளிட்ட சமூகவலைத்தளங்களில் அனுப்பி கப்பம் கோரியமை தொடர்பில் கடந்த 25 ஆம் திகதி எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடொன்று கிடைத்துள்ளது. இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, சந்தேகநபர்கள் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், அவர்களிடமிருந்து இரண்டு கணினிகளும், 2 கைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன. பொலனறுவை மற்றும் அங்கொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 20, 23 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ,இ)

## கொக்குவில் பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினரால் திடீர் சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கை நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதிகளில் அதிகமானோர் பயணிக்கின்றமையால் அதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் பயணித்தவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (து-20)

## 718 பேர் சிக்கினர்

தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 718 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 13 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் கடந்த ஒக்ரோபர் முதல் இதுவரை 61 ஆயிரத்து 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள 13 வீதிச் சோதனைச் சாவடிகளில் மேல் மாகாணத்துக்குள் பிரவேசித்த 2 ஆயிரத்து 82 வாகனங்கள் சோதனையிடப்பட்டுள்ளன. அத்துடன், மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறிய ஆயிரத்து 258 வாகனங்கள் சோதனையிடப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஒ,இ)

## கடற்றொழில் விவகாரத்தையும் ஸ்டாலின் தீர்க்கவேண்டும்

*நன்றியறிக்கையில் டக்ளஸ் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 30

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தமிழக மீனவர்களுக்கு மாற்றுத் தொழில் முறைகளை ஏற்பாடு செய்து வழங்குவதற்கும் தமிழக முதல்வர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவில் தங்கி இருக்கின்ற இலங்கை அகதிகளின் வாழ்வாதார மலர்ச்சிக்காக தமிழக முதல்வரால் நிதி ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக இலங்கை கடற்றொழில் அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கைத் தமிழ் மக்கள் தஞ்சம் தேடி வந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் இரண்டு கரங்களாலும் அரவணைத்து பாதுகாப்பு அளித்தவர்கள் தமிழக மக்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர்களான கலைஞர், எம்.ஜீ. ஆர். மற்றும் ஜெயலலிதா போன்றவர்கள் தங்களால் முடிந்தளவு ஒத்துழைப்புக்களை வழங்கியிருக்கின்றார்கள்.

அதேபோன்று ஏனைய அரசியல் தலைவர்களும் தங்களுடைய தார்மீக ஆதரவினை வெளிப்படுத்தி வந்தனர்.

தான் ஆடா விட்டாலும் தன் தசையாடும் என்பது போன்று, தமிழக மக்கள் குரல் கொடுப்பார்கள் கரம் நீட்டுவார்கள் என்ற நம்பிக்கை, இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் இன்றும் ஆழமாக இருக்கின்றது.

அந்த நம்பிக்கையை நிரூபிக்கும் வகையில், தமிழக முதலமைச்சர் நண்பர் ஸ்டாலினின், இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பான நிதி ஒதுக்கீடுகளும் அறிவிப்புக்களும் அமைந்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

மீண்டும் இலங்கைக்கு திரும்பி வருவதற்கு விரும்புகின்ற எமது மக்களுக்கு கௌரவமான வாழ்வியலை ஏற்படுத்துவதற்குத் தேவையான செயற்பாடுகளை தமிழக அரசுடன் இணைந்து மேற்கொள்வதற்கு தயாராகவே இருகின்றேன் என்ற செய்தியை இத்தருணத்தில் தெரிவிப்பதுடன், இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாகவும் தமிழக முதல்வர் தீர்க்கமான கரிசனை செலுத்த வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பாகும்.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத மீன்பிடி முறைகளினால் எமது கடல் வளங்கள் அழிக்கப்படுவதுடன், இலங்கையின் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர்.

தமிழகத்தில் இருக்கின்ற சிலரின், தீர்க்கதரிசனமற்ற சுயநலன் சார்ந்த தீர்மானத்தால், தமிழகத்தைச் சேர்ந்த எமது உறவுகளான ஆயிரக்கணக்கான குடும்பங்கள், இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதை தமது ஜீவனோபாயமாகக் கொண்டு வாழ்ந்து வருவதை நான் அறிவேன்.

எனவே அவர்களுக்கு, ஆழ்கடல் மீன்பிடி போன்ற மாற்றுத் தொழில் முறைகளை ஏற்பாடு செய்து வழங்குவதன் மூலம், இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோத தொழில் முறைகளில் ஈடுபடுவதை கட்டுப்படுத்த முடியும்.

இலங்கைக் கடற்பரப்பை நம்பி வாழுகின்ற தமிழக கடற்றொழிலாளர்களுக்கு மாற்றுத் தொழில் முறைகளை வழங்குவது தொடர்பாக தமிழக முதல்வர், இந்திய மத்திய அரசுடன் தீர்க்கமான பேச்சுக்களை முன்னெடுத்து, விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதன்மூலம், இலங்கையின் வடக்கு கடற்றொழிலாளர்களின் வளங்களும் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படுவதுடன், எமது உறவுகளான தமிழகத்தினை சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கும் நீண்ட காலத் தொழில் உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளதாக, அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5)

## கர்ப்பிணித் தாய்மார்களின் நலன்கருதி அம்பியூலன்ஸ் வசதியை ஏற்படுத்தவும்

*மாங்குளம் மாதர் சங்கம் கோரிக்கை*

முல்லைத்தீவு மாங்குளம் ஆதார மருத்துவமனையில் இருந்து அம்பியூலன்ஸ் மூலம் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மகப்பேற்றுக்கு கொண்டு செல்லப்படும் பெண்கள் மீண்டும் அம்பியூலன்ஸில் மாங்குளம் வருவதற்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாங்குளம் மாதர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

மாங்குளம் ஆதார மருத்துவமனையில் இருந்து பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் மகப்பேற்றுக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு அம்பியூலன்ஸ் மூலம் அனுப்பப்படுகின்றனர். குழந்தை கிடைத்தவுடன் அவர்கள் முச்சக்கர வண்டியிலோ அல்லது பஸ்ஸிலோ சிரமங்களுடன் திரும்ப வேண்டிய நிலை காணப்படுகிறது.

து கொவிட்-19 அச்சுறுத்தல் உள்ளதன் காரணமாக பஸ்களில் பயணம் செய்வது பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பானதாக இல்லை. இந்த நிலையில் மாங்குளம் ஆதார மருத்துவமனையின் அம்பியூலன்ஸ் வண்டி மூலம் கிளிநொச்சி பொது மருத்துவமனை யில் மகப்பேற்றை நிறைவு செய்த பெண்க ளையும் குழந்தைகளையும் மாங்குளம் ஆதார மருத்துவமனைக்கு திரும்பவும் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை விரைவில் எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



முல்லைத்தீவு மாவட்டத்தின்

# இயற்கை வளங்கள் பல வெளியிடங்களுக்கு கடத்தல்

## பொது அமைப்புக்கள் கவலை

**முல்லைத்தீவு, ஓக. 30**

**முல்லைத்தீவின் ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் மற்றும் ஒட்டு சுட்டானின் கொக்காவில் ஆகிய பகுதிகளில் இருந்து இயற்கை வளங்கள் வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன என்று குறித்த பகுதிகளின் பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.**

இது தொடர்பில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கையில், குறித்த பகுதிகளில் இருந்து மணல், கிரவல் மற்றும் காட்டு மரங்கள் என்பன பெருமளவில் வெளி இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. ஐயன்கன்குளம் காவல் பிரிவாக இருந்ததன் காரணமாக இதனைத் தடுக்க முடியவில்லை என பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையமாக தரமுயர்த்தப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி மற்றும் புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களில் இருந்து நாள்தோறும் மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

நாளொன்றுக்கு குறைந்தது ஐந்து டிப்பர்கள் வெளியிடங்களுக்கு மணலுடன் செல்கின்றன. இதற்கான அனுமதிகள் உயர் மட்டத்தில் இருந்தே கிடைக்கின்றன. இதன் காரணமாகவே மணல் வெளியில் கொண்டு செல்லப்படுகின்றது. ஐயன்கன்குளம் பொலிஸார் பழையமுறிகண்டி சந்தியில் காவல் நிலையம் அமைத்திருந்தும் பயனில்லை. கொக்காவில் இராணுவ முகாம், ஆலங்குளம் இராணுவ முகாம், கோட்டை கட்டியகுளம் இராணுவ முகாம் என்பவற்றினைக் கடந்தே மணல் வெளியிடங்களுக்கு செல்வதன் காரணமாக பொலிஸார் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர். (ஐ-13)



## 120 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் உள்ள பொருண்மியம் நலிந்த 120 குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரத்து 100 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

அரியாலை காந்தி சனசமூக நிலையத்தினரின் ஏற்பாட்டில் லண்டன் வாழ் காந்தி அமைப்பின் நிதிப்பங்களிப்புடன் இந்த உதவிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



ஊரடங்கு நடைமுறையில் உள்ள நிலையில் தேவையற்ற விதத்தில் வீதிகளில் நடமாடும் பொதுமக்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர். கிண்ணியா பொலிஸாரால் குட்டிக்கராச்சி பாலப் பகுதியில் இந்த நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

## நலத்திட்டங்களை அறிவித்த முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி

### புளொட் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 30

ஏதிலிகளாக அடைக்கலம் தேடிச் சென்று தமிழகத்தில் நீண்ட காலமாக தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கான பல்வேறு திட்டங்களை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் அறிவித்துள்ளமை தொடர்பாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில்,

தமிழகத்தில், அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழும் எங்களுடைய மக்களின் வீடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், கல்வி மற்றும் வேலை வாய்ப்பை உறுதி செய்யவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் என்று மொத்தம் 317 கோடியே 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென தமிழக முதல்வர் அறிவித்தமைக்கு மனமார்ந்த நன்றியை கழகம் தெரிவித்துக் கொள்கிறது.

அங்கு அகதிகளாக வாழுகின்ற எங்களுடைய மக்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கு இவ்வாறு பெருந்தொகைப் பணத்தை ஒரே தடவையில் ஒதுக்கி, வேறு எவருமே செய்யாத அளவுக்கு, அவர்களுடைய வாழ்வை மேம்படுத்துவதில் முதல்வர் காட்டுகின்ற அக்கறை எம்மை மனம் நெகிழ வைத்துள்ளது.

கடந்த காலங்களிலும் பல உதவிகளை முதல்வர் செய்திருக்கின்றார். அதேபோல் தொடர்ந்து செய்வார்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கின்றது. முதல்வரது இந்த செயற்பாடு தமிழகத் தமிழர்களில் மாத்திரமல்ல உலகத்தில் வாழுகின்ற அனைத்து தமிழ் மக்கள் மீதும் உங்களுக்குள்ள கரிசனையை மிகத் தெளிவாக காட்டுகின்றது- என்றுள்ளது. (ஒ-5)

## சந்தைகளில் காணாமல் போன அத்தியாவசியப் பொருள்கள்

### அம்பாறை மக்கள் கவலை

அம்பாறை,ஓக.30

அரிசி, மா, சீனி, பால்மா, எரிவாயு உள்ளிட்ட அத்தியவசியப் பொருள்கள் விற்பனைச் சந்தைகளில் இருந்து காணாமல் போயுள்ளன என்று அம்பாறை மாவட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.


அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

மோல்ட் பானங்களைத் தவிர உள்நாட்டு, வெளிநாட்டு பால்மா வகைகள் எதுவும் சந்தைகளில் விற்பனைக்கு இல்லாத நிலை அம்பாறை மாவட்டம் பூராகவும் நிலவிவருகிறது.

சீனி, அம்பாறை நகரில் 206 ரூபா தொடக்கம் 210 ரூபா வரையும். மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் 210 தொடக்கம் 245 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகின்றது.

நாட்டின் முடக்கம் காரணமாக வருமானமிழந்த மக்கள் அரசால் வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபாவைக் கொண்டு இரண்டு நாளை கூட கடத்த முடியாத நிலையில் உள்ளனர்.

அரசாங்கம் உடனடியாக அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த நிலையிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் -என்றனர். (ஐ)



கொடிகாமம் நகர்ப் பகுதியில்

## வீடுவீடாகச் சென்று ஏற்றப்பட்டது தடுப்பூசி

கொடிகாமம், ஓக. 30

கொடிகாமம் நகரப் பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகரின் ஏற்பாட்டில் வீடுவீடாகச் சென்று தடுப்பு மருந்து ஏற்றும் நடவடிக்கை நேற்றுக்காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4மணி வரை இடம் பெற்றது.


இதன்போது, 60 வயதுக்கு மேற்பட்ட 14 பேர் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டனர்.

கிராம அலுவலர்கள் வழங்கிய தரவுகளின்படி வீடுவீடாக தடுப்பூசி வழங்கச் சென்றபோதிலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் அசண்டையீனமாக காணப்படுகின்றனர்.

குறிப்பாக கொடிகாமம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் அதிகளவிலான கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அல்லாரைப் பகுதியில் மூன்று உயிரிழப்புகளும் வெள்ளாம்போக்கட்டிப் பகுதியில் ஓர் இறப்புமாக மொத்தம் 4 கொரோனா உயரிழப்புகள் பதிவாகியுள்ளன.

இப்படியான சூழ்நிலையிலும் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாமல் அசண்டையீனமாகக் காணப்படுகின்றனர் எனக் கொடிகாமம் பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (கு-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஒரு லட்சம் பைஸர் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்கியது அமெரிக்கா

**கொழும்பு, ஓக. 30**

**இலங்கைக்கு, ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பைஸர் கொவிட்-19 தடுப்பூசி மருந்துகளை ஐக்கிய அமெரிக்கா நேற்றுமுன்தினம் நன்கொடையாக வழங்கியது.**

இந்தத் தடுப்பூசிகள் உயிர்களைக் காக்க உதவும் என்பதுடன், இந்தப் பெருந்தொற்றை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மிகவும் அத்தியாவசியமான கொவிட்19 தடுப்பூசியேற்ற செயலெல்லையை இலங்கையில் அதிகரிக்க உத வும் என்றும் அமெரிக்காவின் கொழும்புத் தூதரகம் குறிப்பிட்டுள் எது.

"இந்தப் பெருந்தொற்று அதிகரிப்பு மற்றும் புதிய திரிபுகள் வெளிப்படுகின்ற நிலையில், முடிந்தவரை அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு முடிந்தளவு விரைவாக தப்பூசியேற்றுவதற்கு நாம் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டியது முக்கியமாகும்," என்று இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்தார்.

"அமெரிக்காவின் உணவு மற்றும் ஔடத நிர்வாகத்தினால் அனுமதிக்கப்பட்ட பைஸர் தடுப்பூசிகளின் இந்த நன்கொடையானது இலவசமாக கிடைப்பதுடன், இலங்கை மக்களின் ஆரோக்கியம் மற்றும் செழிப்புக்கான அமெரிக்காவின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது."- என்றும் அவர் குறிப்பிட்டார். (து)

# தமிழக அரசுடன் ஒத்துழைக்கத் தயார்

## மனோ கணேசன் எம்.பி.

கொழும்பு, ஓக. 30

கடல் கடந்து வாழும் தமிழர்களின் மீதும் கரிசனை கொண்ட அரசு என்ற முறையில் தமிழ் நாட்டில் 108 முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியே சுயமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களுக்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பு அறிவிப்புக் களை விடுத்துள்ளமைக்கு இலங்கை தமிழ் முற்போக்குக் கூட்டணித் நன்றி தெரிவித்துள் ளது. இது தொடர்பில் முழுமையாக தமிழக அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளோம் என்பதை அறிவித்து தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட் டுள்ளார்.

இது தொடர்பில் தனது ருவிற்றரில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர் நலன் சார்ந்த பல்வேறு அறிவிப்புகளை தமிழக முதலமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை சட்டமன்றத்தில் வெளியிட்டார்.

இதன்போது இலங்கை அகதிகளுக்கு 300 கோடி இந்திய ரூபாவுக்கும் மேற்பட்ட நிவாரணங்கள் மற்றும் அவர்களின் இந்திய, இலங்கை குடியுரிமை குறித்து ஆராய குழு நியமனம் ஆகிய இரண்டு அறிவிப்புகளை அவர் செய்துள்ளார். இவை இதற்கு முன்னால் இந்தளவு காத்திரமாக நிகழ்ந்திராத முன்னெடுப்புகள் ஆகும்.

1983ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் மற்றும் போர் காரணமாக தமிழகம் நோக்கிவந்த இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்துக்கு திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் உதவிகளைச் செய்துள்ளதாக முதல்வர் கூறியுள்ளார்.

முதல்வரின் அறிவிப்புகள், வீடு, உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்க்கைத் திறன் மேம்பாடு ஆகிய விடயங்களைத் தழுவி உள்ளன.

மதிப்பெண் அடிப்படையில் பொறியியல் மற்றும் வேளாண் பொறியியல் இரண்டு பட்டப்படிப்புகளில் சேரும் முதல் 50 மாணவர்களுக்கு, முதுநிலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கு, கல்வி மற்றும் விடுதிக் கட்டணத்தை தமிழக அரசே ஏற்கும் எனத் தெரிவித்துள்ளார். முகாமில் வாழக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்கான எரிவாயு உருளையுடன் கூடிய அடுப்பு, விலையில்லா அரிசி, சமையல் பாத்திரங்கள் வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

முகாமிலும், முகாமுக்கு வெளியேயும் வாழும் தமிழர்களின் எதிர்கால நலன் கருதி, குடியுரிமைப் பிரச்சினை தொடர்பில், சிறுபான்மையினர் நலன் துறை, வெளிநாட்டு வாழ் நலன் துறை, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அரசு அலுவலர்கள், முகாம் தரப்பில் பிரதிநிதிகள் அடங்கிய ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்ற சிறப்பான யோசனையையும் முதல்வர் தெரிவித்துள்ளார்.



### மக்களின் விருப்பையும் கவனத்தில் கொள்ளுங்கள்

முகாமிலும், முகாம்களுக்கு வெளியேயும் வாழும் இலங்கை தமிழர்கள் இலங்கை திரும்ப வேண்டும் என்றே கொள்கைரீதியாக நாங்கள் விரும்புகின்றோம். ஆனால், 40 வருடங்கள் என்பது மனிதத்துவ கணிப்பில் நியாயமான காலம் என்பதால், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேல் இந்தியாவில் தலைமுறையாக வாழ்கின்ற அவர்களின் விருப்பம் இதில் முதன்மை பெற வேண்டும் என நாம் நினைக்கின்றோம். இந்தக் குடியுரிமை விடயத்தில் இந்தியாவில் வாழும் திபெத்திய அகதிகளுக்கு சமமாக அவர்கள் நடத்தப்பட வேண்டும் எனவும் விரும்புகிறோம். அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை பெறக்கூடிய யோசனையையும் நாம் முன்வைக்கின்றோம் - என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். (து-இ)

# 10 குடும்பங்களுக்கு பல்வேறு உதவிகள்

முல்லைத்தீவு. ஓக.30

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவளை பிரதேசத்தில் சிறப்புத் தேவையுடைய 10 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வீட்டுத் தோட்டத்துக்கான விதைகளும் வழங்கப்பட்டன. நிக்ஷன் அறக்கட்டளையின் தலைவர் எஸ்.மயூரனின் திருமண நாளை முன்னிட்டு இந்த உதவி கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

இதேவேளை சிறப்புத் தேவையுடைய இருவருக்கு ஊன்றுகோல்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் க.தவராசா, நிக்ஷன் அறக்கட்டளையின் இணைப்பாளர் ஞா.யூட்சன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் இ.கவாஸ்கர், சமூக ஆர்வலர்களான எஸ்.மாதவன் மற்றும் எஸ்.தவராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-13)



*கிளிநொச்சி மாவட்டத்தில்*

# எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் இரண்டாவது டோஸ் தடுப்பூசி

***பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு***

கிளிநொச்சி,ஓக.30

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாவது டோஸ் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படும் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

முதலாவது தடுப்பூசி பெற்ற கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி செலுத்தும் திகதி நேற்றுமுன்தினம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் தடுப்பூசியை பெறுவதற்காக ஊரடங்கின் மத்தியிலும் அங்கு சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இந்த நிலையில் இது தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் தொடர்பிலான தகவல் சற்று முன்னரே (நேற்றுமுன்தினம்)எமக்கு கிடைத்தது. எதிர்வரும் 4ஆம் திகதியே தடுப்பூசி எமக்கு கிடைக்கப்பெறும். அதன் அடிப்படையில் அவற்றை 4 அல்லது 5ஆம் திகதி முதல் செலுத்த முடியும் - என்றார். (ஐ-6)



# கொவிட் - 19 நிதியத்துக்கு 10 மில்லியன் நன்கொடை

யாழ்ப்பாணம், ஓக.30

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிறுவுநர் வாமதேவ தியாகேந்திரன். கொவிட்- 19 நிவாரண நிதியத்துக்கு 10 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இந்த நிதி பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியும் யாழ். மாவட்ட கொரோனாக் கட்டுப்பாட்டு மையத்தின் ஏற்பாட்டாளருமான மேஜர் ஜெனரல் ஜகத் கொடித்துவக்கிடம் யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** சாப்பிடவும், தூங்கவும் நேரமின்றி உழைக்க வேண்டி வரும். பிரியமானவர்களோடு ஏற்பட்ட பிரச்சினைகள் மறையும். எதிர்பார்த்தது நடக்காததால் விரக்தி ஏற்பட வாய்ப்புண்டு. உடல் நலனில் அக்கறை தேவை.

**இடபம்:** எதைத் தொட்டாலும் பிரச்சினையில் முடிகிறதே என புலம்புவீர்கள். குடும்பத்தினர் ஒத்துழைப்பர். பணத் தேவை பூர்த்தியாகும். பிள்ளைகளால் நன்மை ஏற்படும்.

**மிதுனம்:** உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சி பற்றிய தகவல் வரும். மற்றவர்கள் பிரச்சினையில் தலையிட்டு அதைச் சரிசெய்வீர்கள். குடும்பத்தில் நிகழும் குதுாகல சம்பவங்கள் மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** நீண்ட நாளைய எண்ணம் ஒன்று நிறைவேறும். நீதி கிடைக்காது என்று நினைத்த விஷயத்தில் நல்ல முடிவு ஏற்படும். உயர்ந்த நிலையை அடைய சந்தர்ப்பம் கைகூடிவரும்.

**சிம்மம்:** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறி சமாதானத்துக்கு வருவர். உடல் நலக்குறைவு வந்து சரியாகும். கவலைகள் மறையும். அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் கிடைக்கும். வீண் பயம் நீங்கும்.

**கன்னி:** சான்றோர்களின் எதிர்பாராத சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். திட்டமிட்ட விஷயம் ஒன்றில் திடீர் மாற்றங்களைச் சந்திப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மறையும்.

**துலாம்:** தேவையற்ற வாக்குவாதங்களில் மூக்கை நுழைக்காதீர்கள். பொது வாழ்வில் புகழ் கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நல்ல செய்தி வரும்.

**விருச்சிகம்:** நண்பர்களிடம் விட்டுக் கொடுத்து போவதால் மகிழ்ச்சி ஏற்படும். மற்றவர்களால் பாராட்டப் பெறுவீர்கள். பொறாமையை கைவிடுங்கள். விமர்சனத்தைப் புறந்தள்ளி முன்னேறுவீர்கள்.

**தனுசு:** கரைந்த சேமிப்பை ஈடுகட்டுவீர்கள். கட்டடப்பணி தொடரும். முன்றேற வேண்டும் என பாடுபடுவீர்கள். நிதி நிலை உயரும். கோபம் குறையும்.


**மகரம்:** எதிரிகளாக இருந்தவர்கள் திடீரென்று நண்பர்களாக மாறுவர். வழிபாட்டால் வளர்ச்சி காண்பீர்கள். மனத் தைரியம் கூடும். ஆரோக்கியம் சீராகும். பயமுறுத்தியவர்கள் விலகிச் செல்வர்.

**கும்பம்:** திட்டமிட்ட விஷயம் நடக்காது. திட்டமிடாத நன்மை நிகழும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறி இணக்கமாவர். உடல்நலம் கூடும்.

**மீனம்:** வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்திருந்த நல்ல தகவல் வரும். விட்டுப் போன வரன்கள் மீண்டும் வந்து நல்லபடியாக முடியும். தொழில் வளர்ச்சி உண்டாகும்.

# வெற்றிமாறன் இயக்கத்தில் கதாநாயகனாக சூரி

பொல்லாதவன், ஆடுகளம், விசாரணை, வடசென்னை, அசுரன் உள்ளிட்ட படங்களை இயக்கியவர் வெற்றிமாறன்.
இவர் தற்போது நடிகர் சூரியை வைத்து 'விடுதலை' என்ற திரைப்படத்தை இயக்கி வருகிறார்.
இத்திரைப்படத்தின் மூலம் முதன்முறையாக கதாநாயகனாக அறிமுகமாக உள்ளார் சூரி. அதற்காக கடுமையாக உழைத்து தனது உடலை 'சிக்ஸ் பேக்' வரை மாற்றி உள்ளார் சூரி.
மேலும் இந்தப் படத்தில் விஜய்சேதுபதி, சூரி,பவானி ஸ்ரீ , கௌதம் மேனன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர்.
இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் அண்மையில் வெளியானது. அதில் சூரி கான்ஸ்டபிள் கெட்டப்பிலும், விஜய்சேதுபதி கைதி கெட்டப்பிலும் இருந்தனர். இந்த போஸ்டர் மிகுந்த வரவேற்பை பெற்றது. விறுவிறுப்பாக நடைபெறும் இப்படத்தின் படப்பிடிப்பு இறுதிகட்டத்தை எட்டி வருகின்றது.






## twitter

சப்பாணி@

முறைத்துப் பார்த்தாலே ஒருத்தரை பழிவாங்கி விட்டதாக நினைத்துக் கொள்கின்றனர் வாகன ஓட்டிகள்.!












## விடுதலை

பல வருடங்களுக்கு பின் ஆப்கானிஸ்தானை தாலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில் கடும் நெருக்கடிக்கு மத்தியில் அங்குள்ள மக்கள் அல்லல்படும் காட்சிகள் சில வாரங்களாக இணையத்தளங்களை உலுக்கி வருகின்றன.
தாலிபான்களின் ஆட்சிப்பிடியில் சிக்காமல் தப்பிப் பிழைத்தால் போதும் என்ற எண்ணத்தில் ஆப்கான் மக்கள் தங்கள் சொந்த நாட்டை விட்டு அகதிகளாக வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று வருகின்றனர்.
ஆப்கானிஸ்தானில் நிலவி வரும் இவ்வாறான கடும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இப்போது ஒரு ஆப்கான் சிறுமியின் ஒளிப்படம் ஒன்று உலகளவில் வைரலாகி வருகிறது.
நாட்டிலிருந்து தப்பி பெல்ஜியத்துக்கு சென்ற பிறகு விமானத்தில் இருந்து இறங்கிய ஒரு ஆப்கான் சிறுமி அந்நாட்டின் விமான நிலையத்தில் இருக்கும் தார்ச் சாலையில் சாதாரணமாக நடந்து செல்லாமல், உற்சாகத்தில் தனது விளையாட்டுத்தனத்துடன் தாவிச் செல்லும் ஒளிப்படம் தான் உலக மக்கள் அனைவரையும் தற்போது கவர்ந்துள்ளது.

Mannar@

சம்சாரம்
இல்லாத வீடு,
சுகாதாரம் இல்லாத
நாடு போலதான்..
நாறிவிடும்.

Jino Kee@

ஆப்பிள் என்று ஆரம்பிக்கிறது
ஆங்கிலம்...
அம்மா என்று ஆரம்பிக்கிறது "தமிழ்"

செங்காந்தள்

இதயத்திற்குக் கீழே
தொப்பை இருந்தாலும்
பாரம் என்னவோ
இதயத்திற்குத்தான்...!!!

அன்பிற்கினியாள்@

பொறாமையை தள்ளி
வையுங்கள்....
பொறுமையை தன்னோடே
வையுங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரியானாவில் விவசாயிகள் வீதியில் இறங்கிப் போராட்டம்

**புதுடில்லி, ஓக.30**
**அரியானா மாநிலம் கர்னாலில் சுங்கச் சாவடிக்கு முன்பாக இடம் பெற்ற போராட்டத்தில் விவசாயிகள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலைக் கண்டித்து, விவசாய சங்கத்தினர் மறியல் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.**

கர்னாலில் சுங்கச் சாவடிக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளில் ஒருவரை, பொலிஸார் இழுத்துச் சென்று, அவரை தடிகளால் தாக்கும் காட்சி சமூக வலைத்தளங்களில் வைரலாகியது. அதையடுத்து விவசாயி மீதான தாக்குதலைக் கண்டித்து, அரியானாவின் பல பகுதிகளிலும் விவசாய சங்கத்தினர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பல்வேறு சுங்கச் சாவடிகளை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற வலியுறுத்திக் கடந்த வருடம் நவம்பர் இறுதியில் இருந்து விவசாயிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஏ-இ)

# அசாமில் கடும் மழை ஒரு லட்சம் பேர் பாதிப்பு



புதுடில்லி, ஓக.30
அசாமில் தொடர்ச்சியாகப் பெய்யும் கன மழையால் அந்த மாநிலத்தில் 11 மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
இந்த வெள்ள இடரில் சிக்கியிருந்த 1.33 இலட்சம் பேர், பாதுகாப்பான இடங்களில் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வெள்ள இடரில் இதுவரை எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை என்பதுடன் 16 சாலைகள் சேதம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

# பயங்கரவாதம் ஊடுருவினால் பதிலடி கொடுக்கும் இந்தியா!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



புதுடில்லி, ஓக.30
ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் பயங்கரவாதம் ஊடுருவினால் அதை ஒடுக்குவதற்கு தயார் என இந்திய முப்படைத் தளபதி விபின் ராவத் தெரிவித்துள்ளார்.
தலிபான்கள் அந்த நாட்டை முழுமையாகக் கைப்பற்ற இரண்டு மாதங்களாகும் என எதிர்பார்த்த நிலையில் அதற்கு மாறாக குறுகிய காலத்துக்குள் அவர்கள் நாட்டைக் கைப்பற்றியமை ஆச்சரியமளிக்கின்றது என்றும் கூறினார்.
ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் அங்கிருந்து இந்தியாவுக்குள் எவ்வாறு பயங்கரவாத நடவடிக்கைகள் ஊடுருவக் கூடும் என்பதில் இந்தியா கவனம் செலுத்தியுள்ளது என்றும் இந்திய முப்படைத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.
தெற்காசியாவில் பயங்கரவாதம் இல்லாத சூழல் இருக்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஏ-இ)

# பாகிஸ்தான் மீனவர்கள் விடுவிப்பு!

புதுடில்லி, ஓக.30
இந்தியச் சிறைகளில் கடந்த 4 வருடங்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த மூன்று பாகிஸ்தான் மீனவர்களை, நல்லெண்ண நடவடிக்கையாக இந்தியா விடுவித்துள்ளது. இந்தக் கைதிகள், 2017 ஆம் ஆண்டில் சர்வதேச கடற்பரப்பிற்குள் நுழைந்தமைக்காக இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்நிலையில் தற்போது விடுவிக்கப்பட்டுள்ள இந்தக் கைதிகள், 2 வாரங்களுக்கு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் ஒப்படைக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட கைதிகளில் இரண்டு மீனவர்களும் ஒரு குடிமகனும் அடங்குவர். (ஏ-இ)



# குண்டு வெடிப்புக்கு இந்தியா கண்டனம்

புதுடில்லி, ஓக.30
காபூல் விமான நிலைய வெடிகுண்டுத் தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், காபூலில் நடத்த குண்டு வெடிப்பை இந்தியா வன்மையாக கண்டிக்கிறது என்றும், இந்தப் பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்தத் தாக்குதல் பயங்கரவாதத்துக்கு எதிராக உலக நாடுகள் ஒற்றுமையாக நிற்க வேண்டியதன் அவசியத்தை வலுப்படுத்துகின்றது என்று அந்த அறிக்கையில் இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது. (ஏ-இ)

# ஆசியாவின் முக்கியமான இடமாக மாறும் இந்தியா!

### இணை அமைச்சர் அனுப்பிரியா தெரிவிப்பு



புதுடில்லி, ஓக.30
2021,2022 ஆம் ஆண்டுகளில் 46 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி இலக்குடன் இந்தியா ஆசியாவில் ஒரு முக்கியமான பிராந்தியமாக இருக்கும் என இந்திய மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்றுறை இணை அமைச்சர் அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
இது நிதியாண்டிற்கான இந்தியாவின் உலகளாவிய ஏற்றுமதி இலக்கில் 400 பில்லியன் அமெரிக்க டொலரைப் பூர்த்தி செய்ய உதவும்.
வர்த்தக ஏற்றுமதியில் பொறியியல் ஏற்றுமதி நான்கில் ஒரு பங்கு ஆகும், மேலும் அனைத்து ஏற்றுமதி துறைகளிலும் மிகப்பெரிய அந்நிய செலாவணி ஈட்டித்தருவதாகவும், பொறியியல் ஏற்றுமதியின் செயல்திறன் கடந்த சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.
அந்நிய நேரடி முதலீட்டுக்கு இந்தியாவை இன்னும் கவர்ச்சிகரமான இடமாக மாற்ற அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. என்றார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிசங்கரி தவராசா

## சட்டத்துறையில் சரித்திர நாயகி

இனம்,மத, பேதமின்றி அனைத்து மக்களின் ஏகோபித்த சட்டத்தரணியாக இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் புகழ்பெற்ற சட்டத்தரணிகள் என்று விரல்நீட்டி சுட்டிக்காட்டக் கூடியவர்களில் ஒருசிலர்தான் உள்ளனர். அத்தகையவர்களில் ஒருவராக வலம் வந்து கொரோனாப் பிடியில் சிக்கி உயிரிழந்துள்ளார் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா.

இலங்கையில் சிறந்த ஆளுமைமிக்க பெண் சட்டத்தரணியான கௌரிசங்கரி தவராசா 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி உயர்நீதிமன்றில் சட்டத்தரணியாக பதவி ஏற்றார். அன்று முதல் இறுதி மூச்சுவரை 35 ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான வழக்குகளை முன்னின்று நடத்தி வெற்றியும் கண்ட சாதனையாளர். அவ்வாறு, 400க்கு மேற்பட்ட மனித உரிமை மீறல் மனுக்களையும் ஆட்கொணர்வு மனுக்களையும் தாக்கல் செய்தவர் இவர்.



2019 ஆட்சி மாற்றத்தின் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டம் முஸ்லிம் தலைமைத்துவத்தின்மேல் திணிக்கப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன் முன்னால் ஆளுநர் அசாத்சாலி மனித உரிமை சிரேஸ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா இவர்கள் சார்பில் தாமே மனுதாரராக பெயரிட்டு வழக்குத் தாக்கல் செய்தவர். நாட்டின் பல முக்கிய வழக்குகளில் முன்னின்று ஆஜராகியதுடன் சட்டவாட்சியை நிலைநிறுத்துவதில் இவரது பங்கு அளப்பெரியது. கொழும்பில் பிரபல சட்டத்தரணியாக மிளிர்ந்த இவர் பல சவால்கள் மிக்க வழக்குகளை மிகத்துணிச்சலுடன் நெறிப்படுத்தி வாதாடிய இரும்புப்பெண்மணி. சிறந்த ஆளுமைமிக்க பெண் சட்டத்தரணியாக மட்டுமல்லாது நற்பண்பாளராக மனித நேயம் கொண்டவராக வலிந்து வருவோர்க்கும் நீதிமன்றுகளில் பல வழக்குகளை முன்நின்று நடத்தியவர்.

இவர் கையாண்ட வழக்குகளை நோக்கினால், அவரது காத்திரமான பணிகளைப் புரிந்துகொள்ள முடியும். அவ்வாறு அவர் கையாண்ட முக்கியமான வழக்குகள் சில,

- வீரகேசரி நாளிதழின் மூத்த பத்திரிகையாளர் சிறிகஜன், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டு செயற்படுகின்றார் என்ற சந்தேகத்தில் 1998 ஓகஸ்ட் மாதம் பயங்கரவாதத் தடைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட எந்தவாரு குற்றச்சாட்டையும் அரச தரப்பால் நிரூபிக்கமுடியாமல் போக 1999ஆம் ஆண்டு நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார்.
- கலதாரி ஹொட்டல் குண்டுவெடிப்பு 1997 - 2004.
- இந்த வழக்கில் கந்தசாமி பற்குணராசா பயங்கரவாதத் தடைப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணை நடைபெறுகையில், குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பெறுவதற்கு முன்னர், உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்து நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டமை.
- மௌபிம பத்திரிகையின் ஊடகவியலாளர் பரமேஸ்வரி சுசந்திகா 10 கிலோ எடையுள்ள தற்கொலை வெடிகுண்டை உடமையில் வைத்திருந்தார் என்றுகூறி கைதும் விடுதலையும் - 2006.
- உதயன், சுடரொளி நாளிதழ்களின் முன்னாள் ஆசிரியரும் காலைக் கதிரின் பிரதம ஆசிரியருமான மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரனின் கைதும் விடுதலையும்.
- முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவானந்தன் கிசோர், செஞ்சிலுவைச் சங்க உத்தியோகத்தராக கடமையாற்றியபோது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்கினார் என்றுகூறி 1999ஆம் ஆண்டு சித்திரை மாதம் பயங்கரவாதத் தடைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு 2000ஆம் ஆண்டு ஆவணி மாதம் விடுதலை செய்யப்பட்டார்.
- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்ட டென்மார்க் கல்லூரி மாணவி சித்திரா, விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவில் மருத்துவ தாதியாக செயற்பட்டதுடன் டென்மார்க்கில் விடுதலைப் புலிகளுக்கு நிதிசேகரித்தார் என்றுகூறி கைதும் விடுதலையும். மீண்டும் டென்மார்க் பயணமும் 1996.
- டென்மார்க் கல்லூரி மாணவி சித்திரா, கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டவுடன் இலங்கைவந்த டென்மார்க் ஊடகவியலாளர்கள் நால்வர் கைதும் விடுதலையும் 1996.
- * வெளிநாட்டு நாணய மோசடிக் குற்றச்சாட்டில் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட தமிழ் வர்த்தகர் வின்சேந்திரராஜன் விடுதலை 1998- 1999.
- 2000ஆம் ஆண்டு கொழும்பில் குண்டுத்தாக்குதல் நடத்த கிளிநொச்சியிலிருந்து வெள்ளவத்தைக்கு வெடிகுண்டுகள், சி4 வெடிபொருள்கள், கிளைமோர் வெடிகுண்டுளை விடுதலைப்புலி உறுப்பினரான சிவபாதசுந்தரம் முகுந்தன் 2509928 இலக்க வாகனத்தில் கொண்டுவந்தார் என்றுகூறி தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்து 2010ஆம் ஆண்டு விடுதலை.
- பாதுகாப்புச் செயலாளராக இருக்கும்போது கோத்தாபய கொலைமுயற்சி வழக்கில் 2006ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட பிரிட்டன் பிரஜையான ரவிக்குமார், கோத்தாபயவை கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டி தற்கொலை குண்டுதாரிக்கு முச்சக்கரவண்டியை கொள்வனவு செய்ய நிதி வழங்கியதான குற்றச்சாட்டில் ஐந்து வருட விசாரணையின் பின்னர் 2011ஆம் ஆண்டு விடுதலையானார்.
- 2006இல் கொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை தொடர்பான நீதிவான் நீதிமன்ற வழக்கிலும் 2016இல் சட்டமா அதிபரால் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலும் ஆஜராகினார்.
- விடுதலைப் புலிகள் இயக்க போராளிகளுக்கு தெகிவளை செலான் வங்கியில் புலனாய்வுப்பிரிவின் பொட்டு அம்மானின் வேண்டுகோளுக்கு இணங்க வங்கிக் கணக்குகளை திறந்து நிதிப்பரிமாற்றம் செய்ய உதவி வழங்கிய குற்றச்சாட்டில் 2010ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட தெகிவளை செலான் வங்கி முகாமையாளர் 2012ஆம் ஆண்டு விடுதலையானார்.

இவை உட்பட ஏராளமான வழக்குகளை அவருடைய காத்திரமான செயற்பாட்டுக்கு உதாரணமாக எடுத்துக்கூறமுடியும்.








இலங்கையில் சிறந்த ஆளுமைமிக்க பெண் சட்டத்தரணியான கௌரி சங்கரி தவராசா 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி உயர்நீதிமன்றில் சட்டத்தரணியாக பதவி ஏற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Cake


Bread


Biscuit


Chocolate


Ice cream

# குறைகளை ஏளனம் செய்யக்கூடாது




ஒருவன் மிகவும் அழகான ஒரு பெண்ணை மணமுடித்தான். அவள் மீது அளவு கடந்த பாசத்தையும் காட்டினான்.
இவ்வாறிருக்க ஒரு நாள் அவள் ஒரு தோல் நோய்க்கு ஆளானாள். அதனால் அவளது அழகு படிப்படியாக குறைவடையத் தொடங்கியது. அவ்வேளை அவளது கணவன் ஒரு பயணமொன்றை மேற்கொண்டிருந்தான்.
அவன் திரும்பி வரும் போது ஒரு விபத்துக்குள்ளாகி அவனது கண் பார்வையை இழந்தான்.
ஆனால் எவ்வித பிரச்சினையும் இன்றி அவர்களது மண வாழ்வு தொடர்ந்தது.
நாற்கள் செல்லச் செல்ல மனைவி தனது அழகும் படிப்படியாக குறைவடைந்து செல்வதை உணர்ந்தாள். ஆனால் குருடனான கணவனுக்கோ இது ஒன்றும் தெரியாது. இருவரும் அவர்களிருவரினதும் அன்பில் எவ்வித வேறுபாடும் மாற்றமும் காட்டாது வாழ்ந்தனர்.
அவன் அவளை அதிகமாக நேசித்தான் அவளுடன் அன்பாக நடந்து கொண்டான். அவளும் அவனுடன் அவ்வாறு தான் இருந்தாள்.
அப்படியிருக்க ஒரு நாள் அவள் இறந்துவிட்டாள்.
அவளது மரணம் அவனை மிகவும் வேதனைப்படுத்தியது.
தன் அன்பு மனைவியின் இறுதி கிரிகைகளை நிறைவேற்றி அவளை அடக்கம் செய்த பின் அவன் தனி மனிதனாக அவ்விடத்தை விட்டு வீடு திரும்பினான்.
அவன் திரும்பி வரும் போது அவனுக்கு பின்னாலிருந்து ஒரு மனிதர் அவனை அழைத்து "எவ்வாறு நீ தனியே நடந்து செல்கிறாய்? இது வரைக் காலமும் நீ உன் மனைவியின் உதவியுடன் அல்லவா நடந்தாய்? எனக் கேட்டான்.
அதற்கு அவன் நான் குருடன் இல்லை. எனது மனைவி நோய் வாய்பட்டுள்ளாள் என்பதை நான் அறிந்தால் அவள் மனம் காயப்படக் கூடும் என்பதால் தான் குருடன் போன்று பாசாங்கு செய்தேன்.
அவள் சிறந்ததொரு மனைவியாக இருந்தாள். அவள் பின்னடைவதற்கு ஒரு காரணமாக இருக்க பயப்பட்டேன்.
அதனால் தான் குருடன் போன்று பாசாங்கு செய்து இதற்கு முன் எவ்வளவு பாசமாக நடந்து கொண்டேனோ அவ்வாறே இது வரையும் அவளுடன் வாழ்ந்தேன்" எனப் பதிலளித்தான்.
பிறரின் குறைகள் எங்கள் கண்களுக்கு தென்படாமல் இருக்க சில வேளைகளில் நாமும் குருடன் போன்று பாசாங்கு காட்டுவது அவசியம்



## அறிந்து கொள்ள சில தகவல்கள்

- பூனை தூங்கும் இடத்தில் உங்கள் படுக்கையை இடுங்கள். அமைதி தராத இடத்தில் பூனை உறங்காது.
- பூச்சிகள் உட்கார்ந்திருக்கும் காளானை தைரியமாக உணவாக எடுத்துக் கொள்ளுங்கள். விஷக் காளான்கள் மீது பூச்சிகள் உட்காராது.
- முயல்கள் குழி பறிக்கும் இடத்தில் மரத்தை நடலாம். மரம் செழிப்பாக வளரும்.
- பறவைகள் வெப்பத்தைத் தவிர்க்க ஓய்வெடுக்கும் இடத்தில் உங்களுக்கான நீர் ஊற்றினை தோண்டுங்கள்.
- பறவைகள் தூங்கப் போகும் நேரத்தில் தூங்கச் சென்று, அவை விழிக்கும் நேரத்தில் எழுந்திருங்கள். நீங்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும்.
- அதிகம் இயற்கையான உணவுகளை உண்ணுங்கள். வலுவான கால்களையும், துணிச்சல் மிக்க இதயத்தையும் பெறுவீர்கள்.
- மீன்களைப்போல அடிக்கடி நீரில் நீந்துங்கள். நீங்கள் பூமியில் நடக்கும்போது கூட மீன்களைப் போலவே உணர்வீர்கள்.
- அடிக்கடி வானத்தைப் பாருங்கள். உங்கள் எண்ணங்களில் வெளிச்சமும், தெளிவும் பிறக்கும்.
- நிறைய அமைதியாக இருங்கள், கொஞ்சம் பேசுங்கள். உங்கள் இதயத்தில் மௌனம் குடிகொள்ளும். உங்கள் ஆன்மா எப்போதும் அமைதியாக இருக்கும்.



# கன்றுக்குட்டி

வெள்ளை வெள்ளை கன்றுகுட்டி
மிகவும் நல்ல கன்றுக்குட்டி
துள்ளிக் குதிக்கும் கன்றுக்குட்டி
சோம்பல் இல்லாக் கன்றுக்குட்டி


அம்மா என்னும் கன்றுக்குட்டி
ஆசையான கன்றுக் குட்டி
சும்மா சும்மா தலையை ஆட்டி
சொல்வ தென்ன கன்றுக்குட்டி

உன்னைப் போல வேகமாக
ஓடு வேனே கன்றுக்குட்டி
என்னைத் துரத்திப் பிடிக்க வருவாய்
எங்கே பார்ப்போம் கன்றுக்குட்டி



# எகிப்து பிரமிட்டுகள்

எகிப்து நாட்டில் 100க்கும் மேற்பட்ட பிரமிட்கள் உள்ளன. எகிப்தில் உள்ள ஒவ்வொரு பிரமிட்களையும் கட்ட தலா 20 ஆண்டுகள் ஆகியுள்ளன.
இவற்றைக் கட்டுவதற்கு 50 ஆயிரம் ஊழியர்கள் வரை பயன்படுத்தப்பட்டுள்ளனர்.
இன்றைய காலகட்டத்தில் ஒரு பிரமிட் கட்ட வேண்டுமென்றால், 1 பில்லியன் அமெரிக்க டாலர் வரை செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.
பிரமிட்களைக் கட்ட பயன்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு கற்களும்10 டன்களை விட அதிக எடை கொண்டவையாக உள்ளன.
பிரமிட்களின் கதவுகள் 20 டன் எடை கொண்டவை.
முற்காலத்தில் மனிதர்களால் கட்டப்பட்ட மிகப்பெரிய அமைப்பாக பிரமிட்கள் இருந்துள்ளன்.
பிரமிட்களுக்குள் ரகசிய கதவுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.
கிசா நகரில் உள்ள குஃபு பிரமிட் 5,750,000 டன் எடைகொண்டது. இதன் உயரம் 481 அடி.
பிரமிட்களின் உட்புறம் 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வளையல்

வளையல்கள் கைகளின் மணிக்கட்டுப் பகுதியின் புள்ளிகளை அழுத்துவதன் மூலம் வெள்ளையணு உற்பத்தி உடலில் அதிகரிக்கிறது. முக்கியமான ஹோர்மோன்கள் சுரப்பும் ரெகுலேட் செய்யப்படுகிறது. இதன் மூலம் தாய்க்கும் சேய்க்கும் நோய் எதிர்ப்பாற்றல் கூடும்.



# அழகை அள்ளும் வாழைப்பழ தோல்!

முதலில் காய்ச்சாத பாலை முகத்தில் தடவி சற்று உலர்ந்ததும் கொட்டனால் முகத்தைத் துடைக்கவும். பின் வாழைப்பழத்தோலின் உள் பகுதியை முகத்தில் தடவி 15 நிமிடம் மசாஜ் செய்து குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவவும். இதனைத் தொடர்ந்து செய்து வந்தால் முகம் பொலிவுறும்.

வாழைப்பழத்தோல் மற்றும் கற்றாழை ஜெல்லை சேர்த்து பசை போல் குழைத்து முகத்தில் தடவி ஒரு 30 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனைத் தொடர்ந்து செய்வதனால் முகப்பருவுக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும்.

வாழைப்பழத்தோலுடன் மஞ்சள்த் தூள் சேரும் போது முகம் பிரகாசமாகும். வாழைப்பழத்தோலுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து முகத்தில் தடவவும். முகப்பரு பிரச்னையால் முகத்தில் உண்டாகும் வீக்கத்தைக் குறைக்க இந்த பேஸ் பேக் உதவும். இதை வாரத்தில் இரண்டு முறை மட்டுமே செய்ய வேண்டும்.

# முடி உதிர்வுக்கு...




தேங்காய் எண்ணெயில் உள்ள பொட்டாசியம் மற்றும் இரும்புச்சத்து தலைமுடியின் வளர்ச்சிக்கு உதவுவதோடு தலைமுடி உதிர்வதையும் குறைக்கும். அதற்கு தேங்காய் எண்ணெய், ஒலிவ் எண்ணெய், விளக்கெண்ணெய் மூன்றையும் இரண்டிரண்டு ஸ்பூன் மிக்ஸ் செய்து, வார்ம் செய்து, தலைக்கு 20 நிமிடம் மசாஜ் கொடுங்கள். குறிப்பாக விரல் நுனியால் முடி வேர்களில் பிரஸ் அண்ட் ரிலீஸ் செய்யுங்க. நான்கு கிழமை எண்ட் செய்தாலே முடி உதிர்வு நிற்கும். நரை வராது.

# உடல் எடையை சீராக பராமரிக்க...

1. உணவில் கவனம் தேவை
2. போதியளவு தூக்கம்
3. காலை உணவைத் தவிர்க்காதீர்
4. சுறுசுறுப்பாக இருக்கவும்
5. தவறாது உடற்பயிற்சி செய்யவும்

**உடல் எடையை குறைக்க முயற்சி செய்யும்போது இந்த உணவுகளை தவிர்க்கவும்:**

1. குளிர்பானங்கள்
2. குக்கீஸ், கேக்
3. உருளைக்கிழங்கு சிப்ஸ்
4. கொழுப்பு மிகுந்த சிவப்பிறைச்சி
5. மல்டிகிரெய்ன் பிரெட்
6. மைக்ரோவேவ் பாப்கார்ன்
7. பீட்சா
8. மாம்பழம், வாழைப்பழம், திராட்சை
9. சோயா. சோஸ்
10. ஐஸ்கிரீம்
11. சொக்லேட்
12. எண்ணெயில் பொரித்த உணவுகள்
13. தர்ப்பூசணிப் பழம்
14. மதுபானம்





# ஃபியூச்சர் ஸ்டைல்

**கூந்தல்**

கூந்தலை ஃபிளாட் அயர்ன் செய்து, டியூப் கொண்டு சுருட்டி உச்சந்தலையில் முடிந்து வைக்கவும். நன்றாக ஹேர்ஸ் பிரே செய்யவும்.

**ஐஸ் லிப்ஸ்**

உங்கள் சரும நிறத்துக்கு ஏற்ற ஐஸ் பிங்க் ஐ ஷேடோவை தேர்ந்தெடுங்கள். உதட்டில் கலரை சமமாகப் பூசுங்கள்.

**டபிள் விங்க்டு ஐஸ்**

கண் இமைகளின் மேல் நியூட்ரல் ஷடோ இடுங்கள். நன்றாக கலந்து விடுங்கள். கண் புருவங்களில் கறுப்பு அல்லது கிரே ஐ பென்சில் கொண்டு நீண்ட விங்க் வரையுங்கள். கண் உள் முனையில் சில்வர், வெள்ளை பென்சிலால் பிரகாசம் அடையச் செய்யுங்கள். கறுப்பு மஸ்காராவுடன் மேக்கப்பை முடியுங்கள்.

# மரண அறிவித்தல்



## திருமதி நிர்மலாதேவி அம்மா நடராசாக்குருக்கள்

**அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.**

திருமதி ந.நிர்மலாதேவிஅம்மா நேற்று (29.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் திரு.திருமதி அழகதுரை- ஜானகியம்மா (வீரமாகாளி அம்மன் கோவிலடி - தொண்டமானாறு) தம்பதியரின் செல்வப்புதல்வியும், அமரர் திரு.திருமதி சோமசுந்தரம் ஐயா - இரத்தினம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் (அம்மன் வீதி, பண்டத்தரிப்பு), சிவஸ்ரீ சோ.நடராசாக் குருக்கள் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் யா/பண்டத்தரிப்பு கலைமகள் வித்தியாலயம், பிரதம குரு பண்டத்தரிப்பு முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்) அவர்களின் பிரிய மனைவியும், கிருத்திகா சுதன் ஐயா கனகதாரா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2021) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரின் பண்டத்தரிப்பு இல்லத்தில் இடம்பெற்று, விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கணவன்
சிவஸ்ரீ சோ.நடராசாக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் கடும் எதிர்ப்பால் புஜி திட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 30

சாவகச்சேரி பிரதேச சபையில் அனுமதி பெறாமல் தென்மராட்சி பகுதியில் புதிய இலத்திரனியல் இணைப்புக்களை பொருத்தச் சென்ற தொலைத் தொடர்பு நிறுவனத்தின் நடவடிக்கை அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. இது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில், எமது பகுதியில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் மேலதிக மாகதுரிதவேக இணைப் புக்களைப் பொருத்துவதற்கு நிறுவனமொன்று முயற்சிகளை மேற்கொண்டது. இது ஆபத்தான செயற்பாடு. சாவகச்சேரி பிரதேச சபைக்கு கடிதம்மூலம் மேற்படி இணைப்புக்களை பொருத்துவதை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினோம். எனினும் அந்த நிறுவனம் தொடர்ந்தும் அதிவிரைவு அலைவரிசை இணைப்பை பொருத்தவந்தது. மக்களின் எதிர்ப்பால் அந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தியுள்ளோம் என்றனர். (ம-159)

## மரண அறிவித்தல்



### கந்தையா கணேசலிங்கம்

(Retired Vice Principal St.John's College, Jaffna)

வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் அரசடி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய உப அதிபர் கந்தையா கணேசலிங்கம் கடந்த (28.08.2021) அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற சிறாப்பர் கந்தையா நாகேஸ்வரி தம்பதிகளின் இளைய மகனும், காலம்சென்ற முத்துத்தம்பி விஜயம்மா தம்பதிகளின் மருமகனும், சாவித்திரி தேவியின் அன்புக் கணவரும், ஈஸ்வரப்ரியா (USA),கிரீஷன் (ஆசிரியர், St.John's College, Jaffna), கலாநிதி கீர்வாணி (UK) ஆகியோரின் அன்புத்தந்தையும் , கஜானனன் (USA), கோசலை, ஜனகன் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்றவர்களான அருணாசலம் (இளைப்பாறிய அதிபர்), சிவபாக்கியம், சண்முகசுந்தரம், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும், வாமநயனா, ஹரி, ஈதன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.08.20201) பி.ப 01.00 மணியளவில் covid நடைமுறைகளை பின்பற்றி குடும்ப உறுப்பினர்களுடன் கோம்பையன் மணல் மயானத்தில் இடம்பெறும். இந்த தகவலை, உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 226 7053 தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 09 . 1945

இறப்பு 29 . 08 . 2021



### தம்பு இரத்தினசபாபதி

உடுவிலை பிறப்பிடமாகவும் அரியாலை பூமகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இரத்தினசபாபதி நேற்று (29.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - இலட்சுமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கதிரேசு - இளையபிள்ளை தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பவிதா (பிரான்ஸ்), யசோதா, வினோத் (SO- Singer Sri Lanka - PLC) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமரன் (பிரான்ஸ்), நிஷாந்தன், சொரூபினி (ஆசிரியர் - யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும், ஜனனி (பிரான்ஸ்), இலக்கியா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தவமலர், தம்பிராசா, ருக்குமணி, சிவஞானம், வைத்திலிங்கம், றோசாமலர், செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசம்மா, பரமசாமி, திலகரஞ்சிதம், இராஜேஸ்வரி (கொழும்பு), செவ்வந்திநாதன் (பிரான்ஸ்), ஜெகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (30.08.2021) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, நல்லூர் பரி.யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 399 7807

பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
076 751 8138

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 12 . 1946

இறப்பு 29 . 08 . 2021



### இராசகாரி செல்வராசா

ஏழாலையை பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசகாரி செல்வராசா நேற்று (29.08.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசகாரி- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்பு கணவரும் விமலதாஸ் (கண்ணன்), மதுரா, சிந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிலா, நிரஞ்சன், நிரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் சங்குவதி, மல்லிகா, றோசா, அமரர் சந்திரா, அமரர் வில்வராசா, அமரர் கனகராசா, இந்திரா, அமரர் பாஸ்கரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அபிநயா, சந்தோஷ், விதுசனா, மிதுர்னிகா, நர்மிகா, ஷபினாஷ் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2021) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 224 3619
077 9189 477
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 11 . 1944

இறப்பு 29 . 08 . 2021



### சபாரத்தினம் செல்வரத்தினம்

(Ret. Walker & Sons Company, Mutwai-Colombo)

ஊரியாட்டி சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் செல்வரத்தினம் அவர்கள் நேற்று (29.08.2021) ஞாயிறுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான சபாரத்தினம் - இரத்தினம் தம்பதிகளின் இரண்டாவது புதல்வரும், காலம் சென்ற பொன்னுத்துரை சின்னம்மாவின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் பாசமிகு கணவரும், சதீஸ்குமார் (DHL GLOBAL FORWARDING LANKA Pvt Ltd), கல்பனா ஆகியோரின் தந்தையும், மனோகரன் (London), லோகராணி (Norway), பாலரத்தினம் (London), ஜீவரத்தினம் (London), யோகரத்தினம் (Colombo), ஜெயராணி (Jaffna), வசந்தராணி (America) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தர்சினி (C/Fathima MLC), மனோஜ் (Metecno Lanka Pvt Ltd) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இரத்தினேஸ்வரி, அமரர் கணேசன், பவானி, இந்திராணி, ரஜனி, இராசகுலேந்திரன், சிவராஜசூரியர், அமரர் கமலாம்பிகை, அமரர் தெய்வேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், அமரர் தர்மலிங்கம், ரதி ஆகியோரின் சகலனும், சாருஜன் (கொ/இந்துக் கல்லூரி), சானுஜன் (கொ/றோயல் கல்லூரி), கிருத்திக்ஸா, ஹரிணி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), ஆகர்ஷா (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.08.2021) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு [illegible] முறைப்படி தகனம் செய்யப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 633 4033

## நூதன முறையில் ஏமாற்றிய பெண்

கொழும்பு, ஓக. 30

மஞ்சள் நிற லாப்காஸ் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு நீல நிற சாயம் பூசி லிட்ரோகாஸ் விற்பனை முகவருக்கு வழங்கி அவரிடம் இருந்து லிட்ரோகாஸ் நிரப்பிய நீல நிற சிலிண்டரை பெண்ணொருவர் ஏமாற்றி பெற்றுச் சென்றுள்ளார். கடந்த 27 ஆம் திகதி ஹட்டன் டிக்கோயா நகரிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வெற்று சிலிண்டரை நேற்று முன்தினம் லொறி ஒன்றில் ஏற்றும் சந்தர்ப்பத்தில் ஒரு சிலிண்டரில் மாத்திரம் மஞ்சள் நிறம் தென்பட்டுள்ளது அதனைத் தொடர்ந்து குறித்த வர்த்தக நிலையத்தின் சிசிரிவி கமராவை சோதனையிட்ட போதே இந்த விடயம் தெரிய வந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் வர்த்தக நிலைய உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்





செல்வி

## துஷாந்தி சிறிசோமாஸ்கந்தன்

(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, தரம்-7F)

அன்னை மடியில்
06 . 12 . 2000

ஆண்டவன் அடியில்
30 . 08 . 2012

ஆண்டு ஒன்பதானதுவே
ஆயினும் மாண்டிடுமோ உம் நினைவு
நெஞ்சிலே உம்மை வைத்து
நினைவெலாம் உமக்காய் கொண்டு
வெம்பி நாம் வடிக்கும் கண்ணீர்
விலகவே இல்லை அம்மா
உம் அழகு மலர் முகம்
எம் நெஞ்சை விட்டு அகலாதம்மா

செ.சிறிசோமாஸ்கந்தன்
புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,

உன் பிரிவால் துயருறும்,
அன்பான அப்பா, அம்மா,
தம்பி, தங்கைமார்.

சிறிசோமாஸ்கந்தன் அரைக்கும் ஆலை
300, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி.

# மரண அறிவித்தல்

பிறப்பு
22 . 08 . 1931

இறப்பு
29 . 08 . 2021



## மார்க்கண்டு சிற்றம்பலம்

( ஓய்வுபெற்ற ஊழியர்-யாழ்ப்பாணம் கச்சேரி)

ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் கேணியடி கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சிற்றம்பலம் நேற்று (29.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அம்பாலிகை அவர்களின் அன்புக் கணவரும், பொன்னம்பலம் (ஜேர்மனி), காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான V.K குணரத்தினம் (யாழ். குணரத்தினம் ஸ்ரோர்ஸ்), கனகரத்தினம் (குணரத்தினம் ஸ்ரோர்ஸ்), அன்னலிங்கம் (யாழ். அன்னலிங்கம் ஸ்ரோர்ஸ்) மற்றும் கமலாம்பிகை (கனடா), பரமேஸ்வரி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரஜனி (கனடா), ஸ்ரீஜீவா (ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ் வட்டுக்கோட்டை, உறுப்பினர்- வலிமேற்கு பிரதேச சபை), ரஞ்சினி, ராகினி (பிரான்ஸ்), ஸ்ரீவிஜயா (இலண்டன்), மாலினி (சுவிஸ்), பத்மினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாபரன் (சிவா-கனடா), சாரதா, தர்மகுலசிங்கம், கருணாகரன் (பிரான்ஸ்), குமுதினி (இலண்டன்), தயாபரன் (சுவிஸ்), ஆனந்தராசா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தர்சிகா, நிஷாந்தன், சோபிகா, சஞ்ஜீவன், சொரூபிகா, கார்த்திகா, உதயபவன், நிர்மலன், சிந்துஜன், அபிஷன், அபிஷிகா, விகுசனா, நிதர்சன், சுவிந்திகா, துருவாசன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், லேயா, ஆருதி, அக்ஷிதி, ஆதனா, துஷி, கயல் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2021) திங்கட்கிழமை 08 மணி யளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கேணியடி கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

077 3858095-மகன்
0776872976-மகள்

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
04.01.1939

உதிர்வு
28.08.2020



## திருமதி பாலசுந்தரம் பரமேஸ்வரி

(ஓய்வுநிலை ஆசிரியை-வரணி மகா வித்தியாலயம்)

ஈழத்தாய் ஈன்ற ஈடிலா திருமகள்
வாழ்ந்திடும்நாள் வரையில் வளர்பிறை வான்மகள்
பொழுதெல்லாம் தமிழ்ப்பணி போற்றியத் திருமகள்
வாழ்கிறாள்எம் மனதில் நினைவாக என்றுமே

கல்வித் தொண்டில் கால் நூற்றாண்டாய்
கடமைத் தவறிடா களவழித் தொண்டராய்
கால மெல்லாம் கனிவுடன் கண்டவரை
கண்களில் சுமந்து கசிந்து நினைக்கிறோம்

பிறந்தநாள் முதல் உடல் இறக்கும் வரையிலே
சிறப்புடன் வாழ்ந்த சீரிளம் தாயை
பேரின மொழியால் போற்றி மகிழ்கிறோம்
தூரிகை முனையால் தொழுது பணிகிறோம்

வாழ்வது எதற்கென வாழ்ந்து காட்டிய
பழுதிலா உம்தடம் பற்றியே வாழ்வோம்
பார் தனில் எம்மை வாழ்வாங்கு வாழவைத்த
பரமேஸ்வரி தாயே வாழ்வெல்லாம் போற்றுவோம்

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## தில்லையம்பலம் கனகசபை

(Retired Radiographer தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகள், Palace staff Clinic Oman, Lanka Hospitals)

தையிட்டி கிழக்கு, காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் Fredrico Road, Wellawatta, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய Radiographer தில்லையம்பலம் கனகசபை கடந்த (28.08.2021) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றிஜிஸ்ரார் தில்லையம்பலம் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அதிபர் கயிலாயபிள்ளை அமராவதி தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும், கோசலை, மதியழகன் கேதீஸ்வரன் (Australia) கேதாரகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரீஷன், தமிழ்வாணி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கோபால சிங்கம், சிதம்பரேஸ்வரி மற்றும் ஆறுமுகம், லோகேஸ்வரனின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நேற்று (29.08.2021) நடைபெற்றது.

இந்த தகவலை, உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க.மதியழகன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழில்...

கொரோனாப் பரவல் வடக்கு மாகாணத்தில் சமூகத் தொற்றாகப் பரவிவிட்டது என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவத்துறையின் தலைவர் பேராசிரியர் மனுஜ் சி.வீரசிங்க தெரிவித்திருந்த நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களது எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையிலேயே கடந்த ஓகஸ்ட் 22ஆம் திகதி முதல் நேற்று வரையிலான 8 நாள்களில் இவ்வாறு 36 கொரோனா மரணங்கள் யாழ். மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளன. இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 236 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

### இங்கு...

வழங்கும் தமிழக முதல்வர் ஸ்டாலினின் அறிவிப்பை வரவேற்ற அமைச்சர் நாமல் ராஜபக்ச, அங்குள்ள ஈழத் த[illegible] அகதிகள் இங்கு மீண்டும் வருவதை வரவேற்கத் தாங்கள் தயாராக இருக்கின்றனர் எனத் தனது ருவிட்டர் செய்தியில் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலடியாகவே நேற்றுத் தனது ருவிட்டரில் கருத்திட்டுள்ளார் மனோ கணேசன். அந்தப் பதிவில், தமிழகத்தில் இருக்கும் இலங்கை அகதிகளை இங்கு வரவேற்க முன், யாழில், பல பல ஆண்டுகளாக இடம்பெயர் முகாம்களில் வாழும் தமிழ் மக்களை மீளக்குடியேற்றுங்கள். வலிகாமம் வடக்கில் பலாலி உட்பட வளமான காணிகளில் இருந்து இராணுவத்தை அகற்றி, இந்த மக்களை தம் சொ[illegible]ந்த நிலங்களுக்குப் போகவிடுங்கள் என்று மனோகணேசன் வலியுறுத்தியுள்ளார். (ம-22)

### கொரோனா...

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 204 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 57 ஆயிரத்து 598ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

### கொரோனா பலி...

அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 192 பேரில் 83 பெண்களும், 109 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-22)

### கோத்தா...

விலையில், பங்கீட்டு அடிப்படையில் சதொச மூலம் விநியோகிக்க அரசு தயாராகி வருகின்றது என்றும் கூறப்படுகின்றது.

போதிய அந்நியச் செலாவணி கையிருப்பில் இல்லை. அதனால் அத்தியாவசிய பொருள்களைக் கூட தேவையான அளவு இறக்குமதி செய்ய முடியாத கையறு நிலைக்குக் கோத்தாபய அரசு தள்ளப்பட்டுள்ளது.

இதனால் அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியைக் கூட 'கோட்டா' முறையில் பிரித்துத் தொகுதி தொகுதியாக அனுமதி வழங்கும் முறையில் மேற்கொள்ள அரசு ஆலோசித்து வருகின்றது.

மாதத்துக்கு இவ்வளவு சீனி, இவ்வளவு பருப்பு என்று பெரு வர்த்தகர்களுக்குக் 'கோட்டா' வழங்கி, அதன் மூலம் இறக்குமதிக்கான அந்நியச் செலாவணி தேவையற்று விரயமாவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசு தீர்மானித்திருக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை அரிசி, பருப்பு, சீனி, பால்மா போன்றவற்றைக் கணிசமான அளவு இறக்குமதி செய்து, நியாயவிலையில் பங்கு அடிப்படையில், வாழ்வாதாரம் குறைந்த தரப்பினருக்கு மட்டும் சதொச ஊடாகப் பங்கிட்டு வழங்குவது குறித்தும் அரசு ஆலோசித்து வருகின்றது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன கூறியிருக்கின்றார். (ம-22)

### இன்று...

மற்றும் ஹிங்குரான சீனித் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பழுப்புச் சீனி நாடு முழுவதும் உள்ள அனைத்துக் கூட்டுறவு விற்பனை நிலையங்களிலும் 130 ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சீனிக்கு அரசு விதிக்கும் இறக்குமதி வரியில் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டு நாடெங்கிலும் இருக்கும் சீனி மாபியாக்களிடமிருந்து பொதுமக்களைக் காப்பாற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ம)

### ஐ.நா....

தமாகவும் மேற்படி குழு உரையாடியுள்ளது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1.15 மணிவரை இணைய வழியாக நடைபெற்றது.

இந்தக் கூட்டம் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் துணைவியார் சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் மறைவுக்கும், மற்றைய உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசனின் பேத்தியாரின் மறைவுக்கும் கட்சியின் அனுதாபங்களைத் தெரிவிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நாம் அனுப்பிய யோசனைகளைத் தொடர்ந்து அந்தக் குழுவை நாம் சந்தித்துப் பேசிய விடயங்கள் பரிமாறப்பட்டன.

அந்தக் குழுவுக்கும் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையில் நடந்த கடிதப் போக்குவரத்தும் அதைத் தொடர்ந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திப்பதற்கு அழைத்தமையும் அது பிற்போடப்பட்டமையும், இந்தப் பின்னணியில் நடைபெற்ற தொடர்பாடல்களின் விபரங்களும் விளக்கிக் கூறப்பட்டன.

அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுக்கும் எம்.ஏ.சுமந்திரன் எம்.பிக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலும் இதில் அடங்கும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாக இருக்கும் தருணத்தில் இந்த முயற்சிகளின் தாக்கங்கள் குறித்தும், இந்த முயற்சிகளில் இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஈடுபாடு குறித்தும் ஆழமாக ஆராயப்பட்டது.

இறுதியில் இதுவரைக்கும் எடுக்கப்பட்ட முயற்சிகள் சரியான முறையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன என்றும், தொடர்ந்து அரசியல் குழு இவ்விடயங்களை ஆராய்ந்து ஆலோசனைகள் வழங்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பப்படவிருக்கும் அறிக்கை சம்பந்தமாகவும் உரையாடப்பட்டது. தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையிலான உரையாடல்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியால் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் பலரால் முன்வைக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பலரது ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய விளக்கங்களும் அறிவிக்கப்பட்டன. வெகுவிரைவில் மத்திய செயற்குழுவை கூட்டுவது என்ற தீர்மானத்தோடு கூட்டம் நிறைவடைந்தது' என்றுள்ளது. (ம-22)

### யாழ்ப்பாணத்தில்...

துடைய ஆண் ஒருவரும், சுன்னாகத்தைச் சேர்ந்த 76 வயதுடைய ஆண் ஒருவரும், மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற இளம்பெண் உட்பட இருவரும் உயிரிழந்தனர். இதையடுத்து கொரோனாவால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 236ஆக உயர்ந்தது. (ம-26)

### துறைமுகத்தில்...

றன.

கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம்தான் இந்தப் பின்னடைவுக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேநேரம் குறித்த சீனித் தொகையை துறைமுகத்தில் இருந்து மீட்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் இரு தினங்களுக்குள் அந்த 5,000 கிலோ சீனியும் மீட்கப்படும் என்றும் தெரியவருகின்றது. (ம)

### 5 நாள்களில்...

ஓகஸ்ட் 24 ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இந்த இறப்புக்கள் பதிவாகியுள்ளன. 24ஆம் திகதி 214 பேரும், 25ஆம் திகதி 209 பேரும், 26ஆம் திகதி 214 பேரும், 27ஆம் திகதி 212 பேரும், 28ஆம் திகதி 192 பேரும் உயிரிழந்துள்ளனர். (ம-22)

# காபூலில் ரொக்கெட் தாக்குதல்

காபூல், ஓக. 30

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் நேற்று மாலை ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும் தாக்குதலில் கொல்லப்பட்டோர் தொடர்பான எந்தத் தகவல்களும் நேற்றுப் பின்னிரவு வரை கிடைக்கவில்லை. ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் நாளையுடன் அங்கிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுகின்றன. இதனால் நாட்டைவிட்டு வெளியேறும் பொதுமக்களை அமெரிக்கா வெளியேற்றி வருகின்றது. அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டாளர்கள் தாக்குதல் நடத்தலாம் என்று ஏற்கனவே அமெரிக்க இராணுவத் தலைமையகம் எச்சரித்தது. இந்த நிலையில் கடந்த மூன்று தினங்களின் முன்னர் நடத்தப்பட்ட தாக்குதலில் 13 அமெ



ரிக்க இராணுவத்தினர் உட்பட 70 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் நேற்றும் அங்கு ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவம் முகாமிட்டுள்ள இறுதி நாள்கள் இன்றும் நாளையும் என்பதால் மேலும் பல தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

# வாள்வெட்டில் இறந்த இளைஞனின் இறுதிச்சடங்கில் பலத்த பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்., குருநகர் பகுதியில் வாள்வெட்டில் உயிரிழந்த இளைஞரின் அஸ்தி, கொட்டடி மயானத்துக்குப் பாடை கட்டி மேள வாத்தியத்துடன் படையினரின் பாதுகாப்புடன் நேற்று எடுத்துச் செல்லப்பட்டது.

குருநகர்ப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஜெரோன் (வயது 24) என்கின்ற இளைஞர் உயிரிழந்த நிலையில் மரணத்தின் பின்னரான பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

உயிரிழந்தவரின் உறவுகள் ஐயம் கொண்டு நீதிமன்றத்தை நாடியதால் மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு உடல் கொரோனா விதிமுறையின் கீழ் தகனம் செய்யப்பட்டு அதன் அஸ்தி உறவுகளிடம் கையளிக்கப்பட்டது. இவ்வாறு கையளிக்கப்பட்ட அஸ்தியின் இறுதி ஊர்வலமே நேற்று நடைபெற்றது.

இதன்போது அஸ்தி நிலப்பாவாடை விரித்து மேளவாத்தியத்துடன் பாடையில் எடுத்துச் செல்லப்பட்டு கொட்டடி மயானத்தில் இறுதி நிகழ்வு இடம்பெற்றது. இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர், பொலிஸார் இறுதிச் சடங்கின்போது குவிக்கப்பட்டிருந்தனர். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்



# நொவக் ஜோகோவிக் வரலாறு படைப்பாரா?

**வொஷிங்டன், ஓக. 30**

**அமெரிக்கப் பகிரங்கத் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரில் சேர்பிய வீரரான நொவக் ஜோகோவிக் வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டுவாரா என்பது தொடர்பில் மிகப்பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.**




இந்த வருடத்தின் இறுதிப் பகிரங்கத் தொடரான அமெரிக்கப் பகிரங்கத் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரில் நொவக் ஜோகோவிக் மீது மிகப்பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதுவரை நொவக் ஜோகோவிக், நடால், பெடரர் மூவரும் தலா 20 பகிரங்கக் கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளனர். அமெரிக்கத் தொடரில் இவர்களில் யார் சம்பியன் ஆகின்றாரோ அவரே ரென்னிஸ் உலகில் ஆண்கள் பிரிவில் அதிகமான பகிரங்கத் தொடர்களைக் கைப்பற்றியவர் என்ற பெருமையைப் பெறுவார் என்ற நிலை இருந்தது. எனினும் காயம் காரணமாக நடால், பெடரர் இருவரும் தொடரில் இருந்து விலகியுள்ளனர். இதனால் ஜோகோவிக் கிண்ணம் வெல்லக்கூடிய வாய்ப்பு மிக அதிகமான அளவில் ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு அவர் கிண்ணம் வென்றால் நடால், பெடரர் ஆகியோரை விட அதிக பகிரங்கக் கிண்ணங்களுடன் ஜோகோவிக் ஆதிக்கம் செலுத்துவார்.

அதேநேரம் ஜோகோ விக் இந்த ஆண்டில் நடைபெற்ற பிரென்ஞ், விம்பிள்டன், ஆஸ்திரேலிய பகிரங்கங்க கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளார். இதனால் அமெரிக்கப் பகிரங்கத் தொட ரையும் கைப்பற்றினால் ஒரு வருடத்தின் அத்தனை பகிரங்கத் தொடர்களையும் கைப்பற்றிய ஒரே வீரர் என்ற வரலாற்றுச் சாதனையையும் அவர் படைப்பார்.

அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் பெண்கள் பிரிவில் கொடிகட்டிப் பறந்தவரான செரீனா வில்லியம்ஸும் இந்தத் தொடரில் இருந்து காயம் காரணமாக விலகியமை குறிப்பிடத்தக்கது. (ம)




## அதிக வெற்றிகளுடன் அசைக்கமுடியாத ரூட்

லண்டன், ஓக. 30

டெஸ்ட் ஆட்டங்களில் அதிக வெற்றிகளைக் குவித்த இங்கிலாந்தின் அணித்தலைவர் என்ற பெருமையை மைக்கல் வாகனிடம் இருந்து பெற்றுள்ளார் ஜோ ரூட்.

இந்தியாவுக்கு எதிராக லீட்ஸில் நேற்றுமுன்தினம் நிறைவடைந்த ஆட்டத்தில். இங்கிலாந்து அணி இன்னிங்ஸால் வெற்றிபெற்றது. இந்த வெற்றி இங்கிலாந்து அணித் தலைவரான ரூட்டுக்குக் கிடைத்த 27ஆவது வெற்றியாகும். 55 ஆட்டங்களில் இந்த 27ஆவது வெற்றியை ரூட் பெற்றுள்ளார். இதற்கு முன்னதாக அதிக வெற்றிகளைப் பெற்ற அணித்தலைவர்களின் வரிசையில் மைக்கல் வாகன் முதலிடத்தில் இருந்தார். அவர் 51 ஆட்டங்களில் 26 வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்துள்ளார். அலிஸ்டர் குக் 59 ஆட்டங்களில் 24 வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார். (ம)

## ஆடுகளத்தில் தவறில்லை ஆட்டத்தில்தான் தவறு

### கோலி வெளிப்படைப்பேச்சு



லீட்ஸ், ஓக. 30

லீட்ஸ் டெஸ்ட்டுக்காக அமைக்கப்பட்ட ஆடுகளத்தில் எந்தத் தவறும் இல்லை. நாம் விளையாடிய விதத்தில்தான் பல்வேறு தவறுகள் உள்ளன என்று வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார் இந்திய அணியின் தலைவரான கோலி.

லீட்ஸ் மைதானத்தில் கிடைத்த இன்னிங்ஸ் தோல்விக்குப் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


நாங்கள் முடிந்தவரை இந்த டெஸ்ட் ஆட்டத்தில் போராடினோம். இரண்டாவது இன்னிங்ஸில் மீண்டுவர எங்களுக்கு சில இணைப்பாட்டங்கள் சாதகமாக அமைந்தன. அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. எங்களின் துடுப்பாட்டம் சற்று சிறப்பாக இருந்த போதிலும், இங்கிலாந்தின் பந்துவீச்சாளர்கள் அதிக அழுத்தம் கொடுத்தார்கள். அதற்கு எங்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

இந்தப் போட்டியைப் பொறுத்தவரை முதல் இன்னிங்ஸில் சொதப்பியது மிகவும் அதிர்ச்சிகரமானது. ஆனால் இங்கிலாந்தில் இப்படியாக சில நேரங்களில் நடக்கும். இதுவொரு நல்ல ஆடுகளம். நல்லபடியாக விளையாட முடியும். ஆனால் நாங்கள் அதைச் செய்யத் தவறிவிட்டோம். பந்துவீச்சிலும் நாங்கள் சரியாக செயற்படவில்லை. லோட்ஸ் தோல்விக்குப் பின்னர் அவர்கள் நன்றாக மீண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த வெற்றிக்கு தகுதியானவர்கள்தான்.

அணியில் எப்போதும் முன்வரிசை திறமையாகச் செயற்பட வேண்ம். அதுதான் அழுத்தமில்லாமல் மத்திய வரிசை விளையாட ழிகளை வழங்கும். முதல் இரண்டு ஆட்டங்களிலும் எமது பலதக் காட்டினோம். அதை மீண்டும் காட்டுவோம் என்றார். (ம)

## புஜாரா எப்போதும் அணிக்குத்தேவை!

### ரோகித் சர்மா ஆதரவு




புதுடில்லி, ஓக. 30

புஜாரா ஒரு சம்பியன் வீரர். அவர் எப்போதும் அணிக்குத் தேவை. அதில் மாற்றுக்கருத்தில்லை என்று விமர்சனங்களுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் ரோகித் சர்மா.

புஜாரா கடைசியாக 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சிட்னியில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் சதம் எடுத்தார்.

அதன் பின்னர் இன்றளவும் அவரால் பிறிதொரு சதத்தைப் பதிவுசெய்ய முடியவில்லை.

இதனால் புஜாரா மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படும் நிலையிலேயே அவருக்கு ஆதரவு கொடுத்துள்ளார் ரோகித்.

புஜாரா ஒரு திறமை வாய்ந்த வீரர். இதை அவர் எப்போதும் உணர்த்தியிருக்கிறார். சில நேரங்களில் எமது நினைவுகள்தான் அதை மறந்து விடுகின்றன. அவர் மிகப்பெரியள வில் மீண்டு வருவார் என்றார். (ம)

**வங்கியாளனாக வரவேண்டுமா...**

BOC, NSB, RDE மற்றும் மக்கள் வங்கி ஆகிய வங்கிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. மேற்படி பயிற்சி வகுப்புகளுக்கான இரண்டாவது அணி (2nd Batch) எதிர்வரும் (08.09.2021) புதன்கிழமை இணைய வழி (Zoom) மூலம் ஆரம்பமாகின்றது.

**077 0333 713, 077 324 9078**
**(8 AM to 2 PM)**
**email-nifco2016@gmail.com**

**"NIFCO"**
**A Group of Rtd Bank Managers**
204, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்குண்டு**

நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 M தூரம்.
பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை. (தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 814 7389, 077 614 7333**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.